க
ல்
வெ
ட்
டு

DRISHTI VISHAM IN LEGEND, LITERATURE AND EPIGRAPHY

M. ARUNACHALAM

Drishti visham is a serpent, which is said to possess the power of killing at sight, through a poison emitted from its eyes. On a first sight, this may appear to be fiction; but we shall see that it may not really be so.

Manimekhalai mentions the serpent *ditti vidam* in five places. The name is the Tamilised form *Drishti visham*. The story here regarding this serpent is that Rahula was bitten by the serpent drishti visham in a previous birth and was born in the next as Udayakumara, who makes love to Manimekhalai; she was in fhe previous birth born as Lakshmi, wife of Rahula.

The term *ditti vidam* is explained by the learned editor of *Manimekhalai*, Dr. Swaminatha Ayyar, in the following words: *Ditti vidam* is a serpent with poison in its eyes. It is also called the serpent having fire in its eyes. The princes of the Naga dynasty (Sindavamsa) are celebrated as those of the *Drishti visha* dynasty.[1] This serpent is said to possess such a poisonous power in its eyes that those who happen to look into them instantly die.[2]

The Velurpalayam plates of Nandivarman III mention a *drishti visham* dance of the king. The plates record a grant of the Pallava king in the Sanskrit language in his sixth regnal year (831 A.D.). Verse 9 in the grant runs as follows :

> Tatho ajayata Nandivarma
> anugrahat Yena Pinaka-paneh
> pranarttitah drishti vishah panindrah

The King Nandivarma danced the *drishti visha* dance of the *panindra* (the serpent king) by the grace of Pinakapani (Siva).

The term *drishti visha* occurring in this inscription is a rare one.

A Buddha Jataka story refers to the birth of the Buddha in a previous birth as this serpent. The commentary on *Nilakesi* mentions this and says : 'You were born as the *drishti visha* serpent; but afraid lest the living beings should die when they happened to look into your eyes, you never opened your eyes'.

Dakshayagapparani gives a very interesting story regarding this serpent. 'This serpent is worn as an armlet by Lord Siva. Its tongue was as wide as the milky ocean of Vishnu; its thickness was the depth of that

ocean. When Vishnu appeared in battle array before Virabhadra at the time of the destruction of the *yaga* of Daksha, he sent his milky ocean against Virabhadra: but the serpent *drishti visha*, lapped up all the ocean with one sweep of its tongue. Seeing this, Vishnu created in a moment one thousand milky oceans Now there was another such serpent which was relatively shorter in length. Its length was not sufficient so that its head and tail could be tied into a knot round the arm of Lord Siva, to form another armlet. So Siva opened its mouth, pushed its tail into the mouth and closed it shut. Afraid of Siva, the serpent would not open its mouth. So, when the thousand oceans advanced on Virabhadra, the serpent caused them to dry up, just by a look'.

Legends connected with the goddess Manasa have a bearing on *drishti visham*. Her story seems to be very popular in Bengal among the masses just like our Mariamman in Tamilnad. Manasa is the snake-goddess; the snake worship is widely prevalent amidst us also, and the *naga panchami* day (*Sravana sukla panchami*, the fifth day after new moon in the month of *sravana* August, September) is specially set apart in our country for the *naga* worship. The behaviour and venom-emitting power of Manasa seem to be akin to *drishti visham*. In the Manasa story, she is the daughter of Siva through Ganga. But Chandi is always jealous of her and in one quarrel 'Chandi lost her temper and jabbed a *kusa* needle into Manas's eye. Manasa took revenge by flashing her great power over Chandi from her other eye, Chandi tell down senseless.'[3] Both eyes of Manasa were poison eyes and at her will they were capable of inflicting death on the person; we should remember that Manasa was a serpent goddess. In the story it is said that at the request of Siva, Chandi was brought to life by Manasa again by another look. On another occasion after a quarrel, Chandi went near Manasa with the intent of kicking her. Again Manasa looked at her through the poison eye and Chandi fell down senseless. Evidently, after Chandi's pricking one eye of Manasa with a needle, that eye became a benevolent eye, while the other eye continued to be a poisonous eye.

Such are the stories and legends connected with the serpent, called the *drishti visham*. The substance of these stories is borne out by facts relating to a species of the serpent cobra from the Central Africa. It is called there the Spitting Cobra. The following extract from an adventure book by a British author[4] will be of interest in this connection.

'Two white streams shot out from the snake's poison fangs like bullets fired from a double barrelled gun. Instead of losing their speed after going a foot or two, they covered the ten feet between the snake and boy in a fraction of a second and exactly hit their target–the eyes of the boy. The poison glands are just back of the fangs. Strong muscles shoot it out through the fangs. It works like a water pistol, except that it is a lot more accurate than a water pistol. The spitting cobra is the only creature on earth that carries a gun in its mouth. The poison when it comes into contact with the eye travels into the entire system and makes one totally blind. It can be nuetralised by a milk treatment every hour.' *(Continued in Page 4)*

திருச்சத்திமுற்றத்துத் திருஞானசம்பந்தன் திருமடம்

வித்துவான் வே. மகாதேவன்

திருப்பனந்தாள்

'நந்திபுரம்' 'நந்திபுரி' 'பழையாறை' 'முடிகொண்டசோழபுரம்' எனப் பல பெயர்களை உடையதாக விளங்கிய சோழருடைய இரண்டாந் தலைநகர் பழையாறை. பழையாறைப் பெருநகரின் பல பகுதிகளுள் 'திருச்சத்திமுற்றம்' என்னும் ஊரும் ஒன்று. கும்பகோணத்தில் இருந்து பேருந்து வண்டிகளின் வழியே பட்டீச்வரத்தை அடைந்து இவ்வூர்க் கோயிற்குச் செல்லலாம்.

திருமடங்கள்

பழையாறை நகரில் சோழருடைய ஆட்சியின் பிற்காலத்தில் சில மடங்கள் இருந்தன. இச்சைவ மடங்கள் நாயன்மார்களின் திருநாமங்களால் அமைபவை. பட்டீச்வரம் திருக்கோயிலில் முதல் பலிபீடத்தில் காணப்படும் சோழர் காலத்துச் சிதைந்த கல்வெட்டொன்றில், *(261/1927)* திருஞானசம்பந்தன் திருமடம், திருநாவுக்கரசர் திருமடம், திருமூலதேவர் திருமடம், என்னும் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இத்திருமடங்களுள் திருஞானசம்பந்தர் மடம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

திருச்சத்திமுற்றம்

'பழையாறை' என்னும் இராசதானியில் இருந்த திருச்சத்திமுற்றத்தில் திருஞானசம்பந்தர் திருமடம் இருந்தது. மூன்றும் இராசேந்திரசோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டுக்குரிய தஞ்சைமாவட்டத்துக் குற்றாலத்துக் கல்லெழுத்துக்களுள் ஒன்று, "குலோத்துங்கசோழ வளநாட்டுக் கீழ்ப்பழையாறு ஆயின இராசராசபுரத்துத் திருச்சத்திமுற்றம் உடையார் கோயில் காமகோட்ட முடையார் கோயிற்கு அருகில் இருந்த மடத்துக்கு வீங்கு நீர்த்துருத்தி உடையார் சொன்னவாறு அறிவார் கோயில் அதிகாரிகள் குடி இருப்பு மனை விற்றமை" கூறும். இக்கல்வெட்டான் அம்மன் கோயிலின் அருகில் ஒரு திருமடம் இருந்தமை உணர்கிறோம். இம்மடம் எது எனத் திருவீழிமிழலையில் உள்ள மூன்றும் இராசேந்திரனின் 23-ஆவது ஆண்டுக் கல்வெட்டு விளக்குகிறது. "இராசராசபுரத்துத் திருச்சத்திமுற்றமுடைய நாயனார் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிற்குக் கிழக்கே அமைந்த திருஞானசம்பந்தன் திருமடத்துத் திருச்சத்திமுற்றத்து முதலியார் மரபினர் (பரிதிப்பெருமாள் சந்தானம்) ஆகிய தவப்பெருமாள் ஆயின ஞானசிவன் என்பார் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் மடத்துக்கு நிலக்கொடை தந்தமை கூறுகிறது. இக்கல்வெட்டால் இம்மடம் கோயிலின் கிழக்குப் பக்கம் இருந்தமை அறியலாம். *(495/1907 and 392/1908)*.

முதலியார் சந்தானம் (மரபு)

திருச்சத்திமுற்றத்தில் இருந்த இம்மடத்தினர் திருச்சத்திமுற்றத்து முதலியார் பரம்பரையினராவர். இவர் சோழவேந்தரின் குருமார்களாக திகழ்ந்தவர். இம்மரபினரின் ஆட்சியில் தமிழகத்தில் பல மடங்கள் இருந்துள்ளன.

1. திருச்சிமாவட்டம் திருப்பலாத்துறையில் உள்ள இராசகேசரி மூன்றும் இராசராசனின் இருபத்திரண்டாம் ஆண்டுக் கல்வெட்டு, 'திருவானைக்காவில் இருந்த நாற்பத்தெண்ணாயிரவன் திருமடம்' திருச்சத்திமுற்றத்து முதலியார் சந்தானத்துப் பிரிவினது எனக் கூறுகிறது. *(586/1908).*

2. இராசேந்திரனின் இருபதாமாண்டு வலிவலம் கல்வெட்டு 'வலிவலத்து மனத்துள்நாயனார் கோயிலின் தென்புறத்தில் இருந்த தவப்பெருமாள் திருமடத்தின் தலைவராகிய 'எதிரொப்பிலாதார் சோமநாத முதலியார்' என்பவர் திருச்சத்திமுற்றத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்தவர் எனக் கூறுகிறது. *(109/1911).*

3. கோவிலூர்க் கல்வெட்டு ஒன்று, 'இவ்வூர்க் கோயிலின் மேற்கே இருந்த கூத்தாடும் நாயனார் திருமடத்துக்குத் தலைவராக இருந்த "பரிபூரண சைவாசாரியார்" இம்மரபினர் எனவும், மற்றொரு கல்வெட்டு, இம்மரபினராகிய ஈசான சிவாசாரியார் இக்கோயிலில் அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனாரை எழுந்தருளுவித்து நிவந்தங்கள் தந்தார்' எனவும் கூறுகிறது. இக்கல்வெட்டுக்களில் அரசன் பெயர் சிதைந்துள்ளது. *(218, 220/1908).*

இத்தகைய கல்வெட்டுச் சான்றுகளால் இம்மரபினர் பல மடங்களின் தலைமைப் பொறுப்பேற்று நிலவியமை புலனாகும்.

வரலாற்று எச்சமா ?

திருப்பனந்தாள் தமிழக வரலாற்றுப் பேரவை 29-4-74 அன்று திருச்சத்திமுற்றத்தில் வரலாற்றாய்வுகள் செய்தது. திருச்சத்திமுற்றம் திருக்கோயிலின் கிழக்குப் புறம் இடிந்து கிடக்கும் கட்டடப் பகுதி ஒன்று இருக்கிறது. இப்பகுதி மிக நீண்ட பகுதி. தொடக்கப் பகுதியிலும் இறுதிப் பகுதியிலுமாகச் சுமார் நாற்பது தூண்கள் இருக்கின்றன. மேன்மறைப்பும் இல்லாமல் பெரும் பகுதி காணப்படுகிறது. முன்புறத்து மேற்குப் பக்கமும் சுவரிருந்தமைக்குரிய சான்றுகள் இன்றும் காணப்படுவதனால் இது மண்டபம் அன்று என்பது உறுதி. இது திருச்சத்திமுற்றத் திருஞானசம்பந்தர் மடமாக இருக்கக் கூடும்.

(Continued from Page 2)

It is probably this species of cobra which is still existing in other countries that had been known in our literary legends as the *drishti visham*: it might have been so called because it directs its poison at the eyes of man and makes him totally blind.

---

1. Epigraphia Indica, Volume III; page 232.
2. See also the story of Jason in Greek mythology where any one who looked at the eyes of the Medusa, was instantly turned to stone.
3. My attention to the Manasa cult was drawn by Sri R. Nagaswamy, Director of Archaeology. Vide page 80, 88 of the Historical studies in the cult of the Goddess Manasa by Dr P. K. Maity, 1966.
4. Willare price, Gorilla Adventure 1969 pages 141-3; Knight Books.

வல்லம் ஏகௌரியம்மன் கோயில்

திரு. நடன. காசிநாதன், எம்.ஏ.,
பதிவு அலுவலர், தஞ்சை

தஞ்சையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வல்லம், முன்பு முத்தரையர் தலைநகராகத் திகழ்ந்தது. அங்கிருந்து ஆலங்குடி செல்லும் வழியில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் சாலையின் மேற்குப் பக்கத்தில் ஏகௌரியம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

திருச்சுற்றும் கோபுரமும்

இரு திருச்சுற்று மதில்கள் உள்ளன. முதற் திருச்சுற்றின் நுழை வாயிலில் நல்லநிலையிலான கோபுரம் ஒன்றும், இரண்டாம் திருச்சுற்று நுழைவாயிலில் சிதைந்த அடிப்பகுதி மட்டும் எஞ்சிய கோபுரம் ஒன்றும் உள்ளன. நாயக்கர் காலத்தைச் சார்ந்த ஒரு முன்மண்டபமும் உள்ளது.

சிற்பங்கள்

மண்டபத்தில் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்த விநாயகர் சிற்பம் ஒன்றும், சண்டேசுரர் சிற்பம் ஒன்றும் உள்ளன. மற்றொரு சண்டேசுரரின் சிற்பம் இராஜராஜன் காலத்தியதாயிருக்கலாம். இவை தவிர இரு உடைந்த தலைகள் 13-14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக உள. முன் மண்டபத்தில் ஒன்றும் இரண்டாம் திருச்சுற்றில் ஒன்றுமாக இரு முருகன் சிற்பங்கள் உள்ளன.

செப்புத்திருமேனி

இக்கோயிலின் மூலநாயகியைப் போன்றதொரு திருமேனி முத்துக் கண் மாரியம்மன் கோயிலில் பாதுகாக்கப்படுகிறது. பத்மபீடத்தின் மீது அமர்ந்து எண்கரங்களுடன் தேவி காட்சியளிக்கிறாள். பீடத்தில் ஐந்து அரக்கர்களின் தலைகள் உள்ளன. "வழியடுமைக் கொண்ட குமரன் உகந்தடுமை சதாசேவை" என்று அந்த பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதியையும், உருவத்தையும் கொண்டு இதை 14-15 நூற்றாண்டின தாகக் கணிக்கலாம்.

கல்வெட்டுக்கள்

அர்த்தமண்டபத்து நுழைவாயிலின் இரண்டு நிலைகளிலும் மொத்தம் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. நுழைவாயிலின் வலப்பக்க நிலையில் இரு கல்வெட்டுக்கள் உள்ளன. ஒன்று பராந்தகனின்

40-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்தது. மற்றொரு கல்வெட்டின் முக்காற் பகுதி திருப்பணி செய்வோரால் மறைக்கப்பட்டு விட்டது. முழுமையாக உள்ள கல்வெட்டு வாசகம் :- 'ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கி யாண்டு கம ஆவது எரியூர் நாட்டு வடகுளத் துறுப்பாடித் துறுப்பாடி உடையான் அனந்தங்காரியாகிய பிராந்தக முத்தரையன் வல்லத்து பஷ்ட்டாரகிக்கு வைச்ச நொந்தா விளக்கொன்று ஒன்றுக்கும் இஞ்ஞாட்டுப் பாட்டத்தாளன் குவாவம் பிரமனுக்கடுத்த ஆடு தொண்ணூற்றுறுங் கொண்டு சந்திராதித்தவலமும் நிசதம் உழக்கு நெய் யட்டுவேனுனேன் குவாவம் பிரம்மனேன் இவை பன்மாயேஸ்வரரிரக்ஷை.[1]

எரியூர் நாட்டைச்சார்ந்த வடகுளம் என்னும் ஊரில் அடங்கியுள்ள துறுப்பாடி என்ற சிற்றூரைச் சார்ந்த அனந்தங்காரி என்னும் பிராந்தக முத்தரையன் என்பான் வல்லத்திலுள்ள பட்டாரகிக்கு நொந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு எரியூர் நாட்டைச் சேர்ந்த பாட்டத்தாளம் என்னும் ஊரில் உள்ள குவாவம் பிரமனிடம் தொண்ணூற்றுறு ஆடு கொடுத்து ஒவ்வொரு நாளும் நெய் அளிப்பதற்கு ஏற்பாடு செய்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது.

அர்த்த மண்டபத்தூண் ஒன்றில் முதலாம் இராஜராஜன் கல்வெட்டு ஒன்று வண்ணம் பூசப்பெற்று படிக்க இயலாநிலையில் உள்ளது. 'திருமகள் போல' எனத்தொடங்கும் இக்கல்வெட்டு, கோவிராஜ ராஜ ராஜகேசரி பந்மர்க்கு யாண்டு யரு-ஆவது எரியூர் நாட்டு கருவுகல வல்லத்து காளாபிடாரி கைதலைபூசல் நங்கைக்கு உடையார் விண்ணனேரி பகலிருக்கைப் பள்ளிக்கட்டிலில் எழுந்தருளி இருக்கச் சூரலூர்க் கூற்றத்துச் சூரலூர் கிழவன் கம்பன் மணியனை விக்கிரமசிங்கனும் வல்லத்து வேளான்(னும்) விண்ணப்பத்தால் . . . .[2] என்று தொடர்கிறது.

சிலர் விண்ணப்பம் செய்ததற்கிணங்க, இராஜராஜன் அளித்த கொடையை இது குறிக்கிறது. பராந்தகன் காலத்தில் வெறும் பிடாரி என்று குறிக்கப்பட்ட தெய்வம், இராஜராஜன் காலத்தில் காளாபிடாரி கைதலை பூசல் நங்கை என்று வழங்கப்பட்டிருக்கிறது.

உண்ணுழி

பீடத்தின் மீது அவ்வப்போது திருப்பணிகள் செய்யப் பெற்ற காளியின் சுதையுருவம் வண்ணம் பூசப்பெற்று விளங்குகிறது. நான்கடி உயரத்தில் எட்டுக்கரங்களோடு வீற்றிருக்கும் அன்னையின் இடக்கீழ் கையில் அரக்கனின் துண்டிக்கப் பெற்ற தலை, குருதி சொட்டச் சொட்டக் காட்சி அளிக்கிறது.

தற்காலத்தன

இரண்டாம் திருச்சுற்றில் காத்தான், இலாட சந்நியாசி, மதுரை வீரன், கறுப்பு ஆகிய தெய்வங்களின் சந்நிதிகளும், குதிரை மீதமர்ந்த வீரன் சிற்பமும் உள்ளன.

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

உடுக்கைப் பாட்டு

திரு. கு. தாமோதரன் எம். ஏ.,

பதிவு அலுவலர்,

சோழ மன்னன் விசயாலயன் காலந்தொட்டு சக்தி வழிபாடு தஞ்சைத் தரணியில் தழைத்து வந்திருக்கிறது. இதற்கு அடையாளமாகத் தஞ்சை வட்டத்தில் உள்ள பெரும்பான்மையான ஊர்களில் அன்னையர் எழுவர்க்கும் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. அரசன் முதல் மக்கள் வரை அனைவரும் நோய்நொடியின்றி வாழவும், நாட்டில் வளம் பெருகவும், எல்லா வகையிலும் வெற்றிகிட்டவும் ஆண்டு தோறும் சக்தியின் வடிவமாக உள்ள அன்னையர்க்கு விழா எடுத்து மகிழ்ந்தனர்.

இதுபோன்ற விழா இன்றும் நடைபெற்று வருவதற்குச் சான்றாக விளங்கு கிறது மாத்தூர். தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லு நெடுஞ்சாலையில் அய்யம்பேட்டைக்கு மேற்கே சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இவ்வழகிய சிற்றூர். இங்கு வடுவாயி அம்மனுக்குக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஒரே கல்லில் அன்னையர் எழுவரும் அன்பே வடிவமாக காட்சி அளிக்கின்றனர். அன்னையர் எழுவருக்கும் சேர்த்து ஒரே கோயிலாக எடுத்தாலும், ஊர் மக்கள் அரவமடக்கி அம்மன் கோயில், மாரியம்மன் கோயில், செல்லி அம்மன் கோயில், பொன்னி அம்மன் கோயில், பச்சையம்மன் கோயில் என்று தனித்தனிப் பெயரிட்டே அழைக்கின்றனர். இதே போன்று இங்கு அன்னையர் எழுவர் கோயில் வடுவாயி அம்மன் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

திருவிழாவும் வழிபாடும்

அன்னையர் எழுவருக்கும் ஆண்டு தோறும் சித்திரைத் திங்களில் விழா எடுக்கப்படுகிறது. அப்போது தேரோட்டமும் உண்டு. கார்த்திகைத் திங்கள் செவ்வாய்க் கிழமையில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி வடுவாயி அம்மனுக்குப் பொங்கலிட்டு மாவிளக்கு வைத்து வழிபடுகின்றனர். இந்தப் பொங்கலை ஊருணிப் பொங்கல் என்று அழைக்கின்றனர். வழிபடும் பொழுது கோயில் பூசாரி பயபக்தியுடன் நெற்றியில் விபூதி பூசி, கழுத்தில் மாலை அணிந்து, அரையில் மட்டும் ஆடை உடுத்தி, கையில் உடுக்கை ஏந்தி பக்தியின் முழு உருவமாகக் காட்சி அளிப்பான். பிறகு பாடவேண்டிய தோத்திரப் பாடலை நல்ல இசையுடன் உடுக்கை அடித்துக் கொண்டு பாட ஆரம்பிப்பான். அப்படி பாடும் பொழுது சாமியிடம் வரங்கேட்டல் மரபாகும். அன்னையை நினைத்து மெய்யுருகப் பாடும்பொழுது பூசாரிக்கு மருள் வந்து (சாமி வந்து) அவர் வாய் மூலம் வரங் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

கருப்பண்ணனை வணங்குதல்

அருள் பாலிக்கும் அன்னையாம் வடுவாயி அம்மனை வழிபடுவதற்கு முன்னர், அவளுடைய வாசலில் காவல் புரியும் கருப்பண்ணனை வணங்குகிறான். அப்படி வணங்கும்பொழுது கருப்பண்ணனின் முழு உருவையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றான் பூசாரி. கட்டாரி, கேடயம் ஆகியவற்றைக்கையில் ஏந்தியும், காலில் மணிகளை அணிந்தும், சரிகை முண்டாசு அணிந்தும், மார்பில் பதக்கமும்,

அத்துடன் சேர்ந்தாற் போன்ற ஆரமும் இடுப்பில் ஒட்டியாணமும், சல்லியும் அணிந்து, கார்மேகம் போன்ற வண்ணத்தையும், கருணை உள்ளத்தையும் கொண்டவனே, அண்ணனே, கருப்பண்ணனே வருக வருக என்று அழைக்கிறான்.

கட்டாரி கேடயம் கலி மணிகள் ஓசையிலும்
கலீர் கலீர் எங்க இந்த வட்டமதிலிட்ட
வடசரிகை மிண்டாசியும் மாரு பதக்கமும்
பதைக்க முடாரமும் பல்கின்ற ஒட்டியும்
ஒட்டியும் சல்லியும் ஊட்டிய உறைந்திட
கட்டுக் கடங்காத கார்மேக வருணனே
வருணனே கருணனே எங்கள் நீலி
கொடுமை ஆயி வாசலில் விளங்கிவரும்
அண்ணு கருப்பண்ணு வா! வா!! வா!!!

வடுவாயி அம்மனை வணங்குதல்

கருப்பண்ணனுக்கு அன்னையாகவும், அருள் பாலிக்கும் தேவியாகவும் வாட்டம் கொண்ட மக்களுக்கு வாழ்வளிக்கும் வடிவமாம் வடுவாயி அம்மனை, அடுத்து வணங்குகிறான். அப்பொழுது அன்னையர் எழுவரின் சிறப்பு இயல்புகளையும், பெருமைகளையும் புகழ்ந்து பாடுகிறான். பிராம்மி மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய எழுவரும் ஒன்று கூடிப் பாலாற்றங்கரையில் தபசு இருந்ததையும், மற்றொரு சமயம் கங்கைக் கரையில் ஆற்று மணலெடுத்துச் சிவபெருமானைச் செய்து பூக்களைச் சொரிந்து தபசு இருந்த வரலாற்றையும் கூறுகிறான். பின்னர் மணமோடு என்ற இடத்திற்குச் சென்று அமர்ந்தாள் அவளை மாத்தூருக்கு வந்து அருள் செய்யும்படி வேண்டுகிறான்.

சரணம் சரணமம்மா சாட்சே திருமுடியே
மூக்கால் சரணமென்ன முடிவணங்கித் தண்டனிட்டேன்
நாக்கால் சரணமென்ன நமஸ்கரிச்சித் தண்டனிட்டேன்
அக்காளும் தங்கையரும் ஐந்திரண்டு ஏழு பேரும்
ஏழ்வரும் கூடி அமர்ந்து பாலாத்தங்கரையில் என்தாயே
பாரத் தவசிருந்தாள் ஆத்து மணலெடுத்து அரனரை
உண்டு பண்ணி சேத்து மணலெடுத்துச் சிவனரை
உண்டு பண்ணி கங்கை நதிக்கரையில் இருந்தாயே
பெருந் தவசு தோட்டந் திறந்து மல்லா
தொன்னை தைத்துப் பூ வெடுத்து வாடி திறந்து மல்லா
வருண லட்சம் பூவெடுத்து கொண்டு வந்த பூவுகளை
கட கட வென்றுதான் சொரிந்து
இருந்தாயே பெருந்தவசு ஆதியிலே சூலமங்கை
அமர்ந்தாளே மணமோடு மணமோட்டில் அமர்ந்திருக்கும்
மகராசி வந்தமரும்.

பாலன் வருத்தம்

அன்னையின் பெருமைகளையும், சிறப்பியல்புகளையும் நீண்ட நேரம் பாடியும் அவள் வரவில்லையே என்ற ஏக்கத்தில் குழந்தையைப்போலக் கதறி அழுகிறான் ஒரு வேளை அவன் அழும் குரல் அவளுக்கு கேட்கவில்லையா? அல்லது கேட்டும் அவள் மனம் கரையாமலிருக்க அவள் உள்ளம் கல்லோ? அல்லது இரும்போ? என்று வருந்துகிறான்.

பாலன் வருந்துரது பார்வதிக்குக் கேட்கலேயா
குழந்தை வருந்துரது உன் கோவிலுக்குக் கேட்கலேயா
மைந்தன் வருந்துரது மகராசிக்குக் கேட்கலேயா
கல்லோடி உன்மனது கரையலேயா எள்ளளவும்
இரும்போடி உன்மனது இரங்கலேயா எள்ளளவும்.

காட்டிக் கொடுக்காமல் கருணை புரிவாய் தாயே

ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இருக்கும் இந்த வேளையில் பூசாரி மெய்யுருகப் பாடுகிறான். இருந்தும் அவள் வரவில்லை. எனவே பூசாரிக்கு அச்சம் மேலிட்டு, தன்னை மக்களிடம் காட்டிக் கொடுக்க நினைத்து எங்கேயோ சென்று விட்டாளோ? அப்படிச் சென்றிருந்தாலும் உடனடியாக வருவாள் என்று நம்புகிறான். வந்து மக்களுக்கு நல்ல வார்த்தை சொல்ல வேண்டுகிறான். இங்கு நடைபெறுகிற விழா முடிந்து மக்கள் அனைவரும் கோயிலை விட்டுப்போகும் வரை அவள் தன்னைவிட்டுப் போகக்கூடாது என்று உரிமையுடன் கேட்கிறான்.

காட்டிக் கொடுக்காதே கிழக்குப் போய் நிக்காதே
சொல்லிக் கொடுக்காதே தூரப் போய் நிக்காதே
கூட்டத்தில் என்னை வைத்து நீ கோயிலில் இருக்கலாமா
மந்தையில் என்னை வைத்து நீ மாளிகையில் இருக்கலாமா
சந்தன மெத்தையிலே சாய்ந்து நித்திரை செய்யாதே
குங்கும மெத்தையிலே குளிர்ந்து நித்திரை செய்யாதே
ஊரில் உள்ள மக்களுக்கு உத்திர வார்த்தை சொல்லவேணும்
நாட்டில் உள்ள மக்களுக்கு நல்ல வார்த்தை சொல்லவேணும்
இந்தக் கூட்டம் கலையந்தினும் என் கொடங்கை விட்டுப்போகாதே
இந்த சந்தைக் கலையந்தினும் என் மடியை விட்டுப் போகாதே.

கோபம் வரவில்லையா

பக்தனுடைய அன்புத் தொல்லையால் அன்னைக்குக் கோபம் வந்து அவளுடைய நீலவிழிக் கண்கள் இரண்டும் நெருப்புத்தணல் ஆகவில்லையா, கோப விழிகள் கொழுந்து விட்டு எரியவில்லையா, வாயைத் திறந்து நல்ல வார்த்தை சொன்னல் வாய்முத்து சிந்திவிடுமா, அல்லது தான்வாயை திறந்தால் தங்கப்பொடி உதிருமா என்று வினவுகிறான்.

நீலமுழிக் கண்கள் இரண்டும் நெருப்புத்தணல் ஆகலேயா
கோபமுழிக் கண்கள் ரெண்டும் கொழுந்திட்டு எரியலேயா
பொங்கலியா கோபம் வந்து பொழியலியா மார்மேலே
வாயத்திறந்தா லென்ன வாமுத்து சிந்துமம்மா
தாவா திறந்தாலென்ன தங்கப்பொடி உதிருமம்மா

பிள்ளை வரங்கேட்டல்

யார் யார் தங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் கேட்ட வரத்தைத் தருகின்ற தாயே, எல்லாச் செல்வங்களையும் பெற்று, மக்கள் செல்வம் இல்லாததால் மனக்குறையுடன் இருக்கும் மக்களுக்கு, மக்களைப் பெறுவதற்கு வேண்டிய வரத்தைத் தரவேண்டும் என்று கேட்கிறான்.

கையேந்தி கேட்ட வரம் கனத்த வரம் நீதருவாய்
மடியேந்தி கேட்ட வரம் மக்கவரம் நீ தருவாய்

மாலையும் மணமும்

என்னைப் பெற்ற தாயே வடுவாயி! உன்னுடைய ஞாபகம் எங்கு உள்ளது? மனதை நிலையாக ஓரிடத்தில் வைத்து நல்ல செய்தி சொல்ல வரவேண்டும். உன்னுடைய வருகைக்காகச் சமுக்காளம் போட்டு, விடிய விடிய கச்சேரி நடைபெறும். அம்மா தாயே நீ மனம் வைத்து இங்கு வந்தால்தான் பொழுது விடியும், இல்லை என்றால் விடியாத பொழுதாகிவிடும். மல்லிகைப் பூ மாலை உன்னுடைய மார்பில் புரண்டு ஆடுகிறது. முல்லைப்பூ மாலை முதுகை அலங்கரிக்கிறது, கதம்பமணம் வீசுவதும், கஸ்தூரி வாடை அடிப்பதும் உனக்கு தெரியவில்லையா என்று குறை பட்டுக் கொள்கிறான்.

உனக்கு எங்க கவலையம்மா என்னைப் பெற்றவளே
ஆச்சி வடுவாயி உனக்கு எவ்விடம் ஞாபகமோ
உன் சிந்தை கலங்காம செய்தி சொல்ல வேணுமம்மா
இன்னிக்கு போட்ட சமுக்காளம் விடியந்தினும் கச்சேரி
வந்தா விடியுமம்மா வடுவாயி நீ வராங்காட்டி அஸ்தமிக்கும்
உனக்கு மல்லிகைப்பூ ஆரமம்மா உன் மார்பில் புரண்டாட
உனக்கு முல்லைப்பூ ஆரமம்மா உன் முதுகில் புரண்டாட
உனக்குக் கதம்பம் மணக்கலையா கஸ்தூரி வீசலையா

பூசை வருதல்

அன்னையின் புகழ் நான்கு திசைகளிலும் பரவி இருக்கிறது. இதன் காரணத்தால் அவளை வணங்குவதற்கு தெற்குப் பகுதியில் இருந்து பூசை கொண்டு வருகின்ற மக்கள் பெருந்திரளாக வருவதால் தெருக் கொள்ளவில்லை. வடக்குப் பகுதியில் இருந்து வருகிறவர்கள் நீண்ட தூரத்தில் இருந்து வருவதால் வண்டியிலே வருகின்றனர். கிழக்குப் பகுதியில் இருந்து வருகிற மக்கள் கிளார், கொட்டு முதலிய வாத்தியங்களால் பேரிசை எழுப்பி வருகின்றனர். மேற்குப் பகுதியில் இருந்தும் அவளுடைய அன்பர்கள் வருகின்றனர் என்பதை மிகவும் அழகாகப்பாடுகிறான் பூசாரி.

அம்மா உனக்கு தெக்கத்திப் பூசைவரும் தெருவுகொள்ளாச் சேனை வரும்
அம்மா உனக்கு வடக்கத்திப் பூசைவரும் வண்டி கொள்ளாச் சேனை வரும்
அம்மா உனக்கு கிழக்கத்திப் பூசைவரும் கிளார் கொட்டு வாத்தியங்கள்
அம்மா உனக்கு மேற்கத்திப் பூசைவரும் மேனாட்டுச் சேனை வரும்.

சேவகன் வருதல்

உனக்கு வரவேண்டிய பூசையெல்லாம் வந்துவிட்டது. இனியும் காலம் தாழ்த்தாமல் நீ வருவதற்கு அடையாளமாக உன்னுடைய சேவகனுக்குக் கழுத்தில் மாலை அணிவித்து உடனே அனுப்பிவைக்க வேண்டுமென வேண்டுகிறான்.

மாலைக் கழுத்திலிட்டு அனுப்பிவிடு சேவகனை
ஆரங் கழுத்திலிட்டு அனுப்பிவிடு சேவகனை

பால் காய்ச்சுதல்

அன்னை இங்கு வந்தவுடன் அவள் அருந்துவதற்குப் பால் காய்ச்சி வைத்துள்ளதாகத் தெரிவிக்கிறான்.

ஆலஞ்சருவு அருச்சி ஆதரவாய் பால்காச்சி
புங்கம் சருவு அருச்சி போதரவாய் பால் காச்சி

அரசுப் பட்டம் கட்டி ஆளவந்தவளே

எட்டாத தேசமாகிய வானுலகையும், இப்பூலோகத்தையும் ஆள்வதற்கு அரசுப் பட்டம் கட்டி வந்துள்ள தாயே வரவேண்டும் என்று அழைக்கிருன்.

எட்டாத தேச மெல்லாம் தொட்டாளப் பெண் பிறந்தாய்
பெண்ணுய்ப் பிறந்தல்லவோ பூலோகத்தை ஆளவந்தாய்
ஆணுய்ப் பிறந்தல்லவோ அரசுப் பட்டம் ஆளவந்தாய்.

தேர் அழகியே வா

செம்பால் செய்யப்பெற்ற சிலையின் அழகினையும், புதிதாக வார்த்த சிலையின் பொலிவையும் பெற்றவளே, சிவந்த மணிகளும், மணிகள் கோத்த துணிகளும் தொங்கும் அழகிய தேரை உடையவளே வருக!

செப்புச்சிலை அழகி சிந்தாமணித் தேரழகி
வார்ப்புச் சிலை அழகி வஸ்தரமணித் தேரழகி

தேர் வடம் பிடித்தல்

அன்னை அமர்ந்து உலா வருகிற அழகிய தேரின் வடத்தை ஊர் மக்களும், பார்ப்பனரும், நாட்டாரும் (வணிகர்) பிடித்து இழுக்கின்றனர்.

ஊரார் வடம் பிடிக்க உத்தமியார் தேரடக்க
பாப்பார் வடம் பிடிக்க பத்தினியார் தேரடக்க
நாட்டார் வடம் பிடிக்க நாயகியார் தேரடக்க

தேர் அசைந்து ஓடுதல்

தேர் வடம் பிடித்துப் பக்தர்கள் இழுக்க, அவர்கள் மனங்குளிர அவர்களுக்கு அருள்பாலித்த அன்னை வடுவாயி அமர்ந்துள்ள தேர் இனிதே அசைந்து ஓடுகிறது என்று முடிக்கிருன் பூசாரி.

அச்சு கிருகிருங்க ஆணிக்கால் ஓசையிட
உருளை இல்லாத் தேரடியே ஓடுதே உன் அருளால்
அச்சில்லா தேரடியே அசையுதே உன் அருளால்

இப்பாட்டு மிகவும் எளிமையாகவும், நெஞ்சைத் தொடுகின்ற வகையிலும் அமைந்துள்ளது. எளிமையான வழிபாட்டு முறை இருந்தது என்பது தெரிகிறது. தெய்வத்தினுடைய முழு உருவத்தின் அழகினைச் சொல்லி வழிபடுகிற பழக்கம் இருந்திருக்கிறது. வழிபடும் பொழுது பூக்களைச் சொரிந்து வழிபட்டனர். 'வருண லட்சம் பூ வெடுத்து' என்ற அடி நமக்கு இன்றைய 'லட்ச அர்ச்சனையை' நினை வூட்டுகிறது. பூசைக்கு வேண்டிய பூக்களைப் பறித்துக் கையில் எடுத்து வந்து தெய்வத்திற்குச் சூட்டினுல் புனிதத்தன்மை கெட்டுவிடுமென்று கருதி, தென்னை ஓலையில் தொன்னை தைத்து அதில் பூவெடுத்து வந்து பூசை செய்தனர் என்பதைத் 'தோட்டாந் திரந்து மல்லா தொன்னை தைத்துப் பூவெடுத்து' என்று பாட்டு குறிக்கிறது. மல்லிகைப்பூ, முல்லைப்பூ, கதம்பப்பூ ஆகிய பூக்களையும், கஸ்தூரி போன்ற வாசனைப் பொருள்களையும் கொண்டு வழிபாடு செய்தனர் என்பது வெளிப்படுகிறது.

பூசைப் பொருள்களை மக்கள் பெருந்திரளாக வண்டியிலும், நடந்தும் கொண்டுவந்தனர். அப்படிக் கொண்டு வரும்பொழுது இன்னிசைக் கருவிகளான கிளார், (ஊதி ஒலி எழுப்பும் கருவி) கொட்டு (அடித்து ஒலி எழுப்பும் கருவி) முதலிய

வாத்தியங்களால் பேரிசை எழுப்பி வந்தனர் என்பது தெரிகிறது. விழாவின் போது எல்லா இனத்தவரும் ஒன்று கூடி மகிழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

தேர் ஓடவேண்டுமென்றால் உருளையும், அச்சும் தேவை. இவை இரண்டும் இல்லாமலே தேர் ஓடியது என்று பாட்டுக் குறிக்கிறது. இதிலிருந்து தெய்வத்தை நம்பினால் எதுவும் நடக்கும் என்று மக்கள் நம்பினர் என்பதையும், அவர்களுடைய பக்தியின் மேம்பாட்டையும் இப்பாட்டு படம் பிடித்துக் காட்டுகிறது. 1

1. பாடியவர் மாத்தூர் வடுவாயி அம்மன் கோயில் பூசாரி திரு. மாணிக்கம் பிள்ளை.
உதவியவர் : திரு. கே. ஸ்ரீதரன், எம். ஏ., தொல்பொருள் ஆய்வாளர்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

முத்தரையர்கள் பிடாரிக்குக் கோயில் எடுப்பிப்பதிலும் வழிபாடு நிகழ்த்துவதிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். தஞ்சையை அடுத்த செந்தலையில் 'பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறன வனெடுப்பித்த படாரி கோயில்' குறிப்பிடப்படுகிறது. இங்கு பிராந்தக முத்தரையன் விளக்கெரிக்க நிவந்தம் அளித்துள்ளான். கல்வெட்டுக்கள் மூலம், இக்கோயில் பராந்தகனுக்கு முற்பட்டது என்பது வெளிப்படை. விஜயாலய சோழன் தஞ்சையில் நிசும்பசூதனியைப் பிரதிஷ்டை செய்த போதே இக்கோயிலில் உள்ள தெய்வமும் பிரதிஷ்டை செய்யப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தஞ்சை வட்டம் மாத்தூரில் வடுவாயி அம்மனைப் பற்றிய ஒரு நாட்டுப் பாடலில் ஏகௌரி அம்மன் குறிப்பிடப் பெறுகிறாள்.

வல்லத்து ஏகௌரி வடக்குப்பாத்த செல்வி
நீலி கபாலி நிரந்ததோர் பஞ்சாட்சரி
நாலு மூல சௌந்தரியே நாயகியே வாருமம்மா.[3]

1, 2 த. அ. தொ. ஆ. துறை சிறப்ப ஆய்வு செய்தபோது புதிதாக படியெடுத்த கல்வெட்டுக்கள்.

3. சேகரித்தவர் கு. தாமோதரன், பதிவு அலுவலர்.

ராஜசிம்மனின் பட்டப் பெயர்கள்
சித்திரம் போன்ற பல்லவ கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் உள்ளது.

பாஞ்சாலங்குறிச்சிப் போர்–

பார்த்தவர் கூறுகிறார்

பாஞ்சாலங்குறிச்சிப் போரை ஒருவர் நேர்முகமாகக் கண்டார். அப்போரில் பங்குகொண்டவர் அவர். பாஞ்சாலங்குறிச்சி மறவர்களின் பெரு வீரத்தையும், தன்னலம் இல்லாத் தியாகத்தையும், கடும்போரின் இடையிலும் மாற்றானுக்குக் கனிவுகாட்டும் பெருந்தன்மையையும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். பீரங்கிப் பலத்தையும், துப்பாக்கிப் பலத்தையுமே கொண்டு பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றிய கும்பினியாரின் படையைச் சேர்ந்தவர் அவர். அம்மாற்றாரின் கூற்று இதோ:

கோட்டைவாயிலின் வட பகுதியைப் பிளந்து உள்ளே செல்ல வேண்டும் என்பது எங்கள் திட்டம். ஆறு பவுண்டுக் குண்டுகளை வீசும் இரண்டு பீரங்கிகளும், இரண்டு ஹோவிட்சர் என்ற பீரங்கிகளும் இதில் பங்கு கொண்டன. 74-வது ரெஜிமெண்டைச் சேர்ந்த இரண்டு படைக் கம்பெனிகள் பாய்ந்துசென்று பிளவைப் பிடிக்க அனுப்பப்பட்டன. அவர்களுக்கு உதவியாக கைக்குண்டு எறியும் உள்நாட்டுப் படை வீரர்கள் அனுப்பப்பட்டனர். இவர்களுக்கும் உதவியாக மூன்றாவது பட்டாலியன் வலப்புறமும் இடப்புறமுமாக வரிசை வரிசையாகப் பிரிந்து கோட்டை மீது பாய்வோருக்கு உதவியாகச் சுட்டுக் கொண்டே முன்னேறியது. நம் வீரர்கள் மிகவும் வேகமாக முன்னேறினர். வேலி வெகு விரைவில் தாண்டப்பட்டது. நினைக்க முடியாத அளவுக்கு அவ்வளவு அதிகமாக சுட்டுக் கொண்டே முன்னேறினர். ஆனால் திரும்பத் திரும்ப கோட்டைப் பிளவின் மேல் ஏறச்செய்த முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லை.

மேலே ஏற முயற்சித்த ஒவ்வொரு வீரனும் வேல் முனைகளாலும், துப்பாக்கிகளாலும் தாக்கப்பட்டுத் தூக்கி எறியப்பட்டான். கோட்டை மீது ஓர் அடி கூட வைக்க முடியவில்லை. முடிவில் திரும்பிவிட ஆணையிட்டோம். அப்பப்பா! விளைவு சொல்ல முடியாத பயங்கரம். நமது கொல்லப்பட்ட படை வீரர்களும், குற்றுயிராய்க் கிடந்தவர்களும் கோட்டைப் பிளவு வாயிலிலேயே கிடந்தார்கள். எதிரி வீரர்கள் நம் பின் பாய்ந்தனர். கிடந்தோர் உடல்களையும், இறந்தோர் உடல்களையும் குத்தித்தீர்த்தனர்.

கோட்டைப் பிளவை வெறும் வேல்முனைகள் மட்டும் காத்து நின்றன. அதன் பின் நின்ற வீரர்கள் நம் வீரர்களைச் சுட்டுத்தள்ளிய வண்ணம் இருந்தனர். அந்த குழப்பத்தில் ஒரு ஹோவிட்சர் பீரங்கியை பிளவின் வாயிலில் விட்டு விட்டு வந்து விட்டோம். ஆதலின் அதை எடுத்து வர ஆறு தளபதிகளும், ஐம்பது வீரர்களும், திரும்பிச் சுட்டுக் கொண்டே

சென்றனர். இப்பணியில் பல வீரர்களும் ஒரு அதிகாரியும் கொல்லப் பட்டனர்; பிறர் காயமடைந்தனர்.

நமது படைகள் மிகவும் பத்திரமான இடத்தை ஓடி அடைந்ததும் மீண்டும் அணி வகுத்தோம். கோட்டையிலிருந்து சுமார் ஒரு மைலுக்கு அப்பால் இப்பொழுது இருந்தோம். நமது வெடிகளையும் பீரங்கிகளையும் எதிரிகளின் கண்ணுக்கு எட்டாமல் ஒளித்து வைத்தோம். எங்களது ஆபத்திலும் தோல்விகளிலும் பங்கு கொள்வதுபோல் எங்கள் அணியில் பயங்கர நிசப்தம் நிலவியது. நம்மை விட்டுப் பிரிந்த நமது சகோதரர் களுக்கு மனதால் அஞ்சலி செலுத்துவதாக அது அமைந்திருந்தது. நமக்கு மேலும் எல்விதத் தொந்தரவும் அளிக்காமல் நமது எதிரிகள் நமது துன்பங்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இன்று நமக்கு ஏற்பட்ட முழுத் தோல்விக்கு காரணம் என்ன என்பது சொல்லொணுததாகவே இருந்தது. அந்தப் பிளவு எப்படி காப்பாற்றப்பட்டது என்பது மாயமாகவே இருந்தது. ஒரு எதிரி கூட அப்பிளவில் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு தலை கூட வெளியே தெரிய வில்லை. அங்கிருந்த அரண் சிகரங்களை நாங்கள் அழித்திருந்தோம். அங்கே யார் இருந்தார்கள்? எப்படி இருந்தார்கள் என்றே புரியவில்லை. அப் பிளவில் எங்களுக்கு வெறும் வேல் முனைகள் மட்டுமே தெரிந்தன. எதிரி கள் கோட்டையின் பிற இடங்கள் அனைத்திலும் காணப்பட்டனர். நமது படையினர் சுட்டுத் தள்ளிக் கொண்டே இருந்தனர். அதை அவர்கள் சிறிதும் மதித்ததாகவே தெரியவில்லை. எவ்வித நடுக்கமுமின்றி உயிரை மதியாது பணி புரிந்து கொண்டிருந்தனர். நாம் படைகளை மாற்றி மாற்றி அனுப்பிக்கொண்டிருந்தோம். ஆனல் அவர்கள் அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. ஆனல் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள், போர்க் குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். நாம் திரும்பி ஓடிய பிறகுதான் அவர்களது போரொலி நின்றது. நமது படைகளில் பங்கு கொண்ட 140 ஐரோப்பியர்களில் 106 பேர் இறந்தனர். அல்லது படுகாயமுற்றனர். இது மிகவும் மாபெரும் இழப்பு என்பதில் ஐயமில்லை.

ஏப்ரல் முதல் நாளன்று கோட்டைப் பிளவு வாயிலில் வீழ்ந்து இன்னும் புதைக்கப்படாமல் இருக்கும் நமது வீரர்களைத் தாங்கொணு மனத்துயரத்தோடு கண்டோம். ஒரு சமாதானக் கொடியைக் கோட்டைக் குள் அனுப்பினேம். இறந்த நமது வீரர்களைப் புதைப்பதற்கு அனுமதி வேண்டி இக்கொடியை அனுப்பினேம். எவ்வித நிபந்தனையும் இன்றி அனுமதி அன்போடு அளிக்கப்பட்டது. பல்வேறு துண்டங்களாகக் கிடந்த நமது வீரர்களின் உடல்களை எடுத்துவந்து போர் மரியாதைகளு டன் புதைத்தோம். நமது எதிரி பெரும் மனிதத்தன்மையுடனும் நமக் கெல்லாம் வழிகாட்டும் வகையிலும் நடந்து கொண்டதை எண்ணி வியக்கிறோம். இம்மியளவுகூட நமக்கு எவ்விதத் தொந்தரவும் அளிக்காது வழிகாட்டினர்.



இத்துறையால் வெளிக்கொணரப்பட்ட கட்டபொம்மனின்
அரண்மனைப் பகுதிகள், பாஞ்சாலங்குறிச்சி, நெல்லை மாவட்டம்.



நாளோலக்க அறையின் தோற்றம்.



நாளோலக்க மண்டபத்தின் அடிப்பகுதி; அரசுக்கட்டில் இருந்த அடிப்பீடம்.



அந்தப்புரத்தின் அடிப்பகுதி.



அரசியர் இருக்கை முன்புறம்.



யானை கட்டும் தறி.

கட்டபொம்முவின் முன்னோர் சிலை.



சுதையாலான தாமரை போன்ற அலங்கரிப்பும், இன்ன பிற அலங்கரிப்புகளும்.



பீரங்கிக் குண்டுகள், பீங்கான் தட்டு, ஆப்பசச்சட்டி, மதுப்புட்டி முதலியன,
பாஞ்சாலங்குறிச்சி

Cl. James Welsh என்பார் தனது போர் நினைவுகள் என்னும் நூலில் இவ்வாறுகூறுகிறார். அவர் இப்போரில் நேர்முகமாகப் பங்கு பெற்றவர். அவரது நூல் *1830*-இல் அச்சிடப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி என்ற தலைப்பின்கீழ் சுமார் *18* பக்கங்கள் அவர் பாஞ்சாலங்குறிச்சிப் போரை சித்திரித்துள்ளார்.

Panjalum Coorchy :

An irregular parallelogram two sides of which were about five hundred feet and the other two about three hundred feet only built entirely of mud of a very solid and adhesive quality, presented so very unwar like an object to the eye that some of our soldiers, at first sight, Compared it to a kail yard with a dike about it. The wall was generally about twelve feet high with small square bastions, and very short curtains. A few old guns were mounted in these bastions, and the whole was surrounded by a thick hedge of cockspur thorns, but no ditch. Arriving before it at eight o'clock A.M. Preparations were instantly made for breaching the north-western bastion, with the two iron twelve and one eight-pounder from a bank about nine hundred yards distance and at half past eight we opened a fire though by no means so destructive as was anticipated. The eight pounder, indeed a foreign gun, fired so wild, that the shot seldom hit the fort. At noon, therefore, the guns were moved on to another bank, about four hundred years from the wall and continued playing till half-past three, when the breach appearing practicable, the storm was ordered. The two howitgers and two six-pounders had also been firing on the fort from a bank to the north-ward, but the sheels were so bad and the fuses so miserable that few of them burst, or did any execution.

The party for assault was composed of the two companies of the 74th regiment, all the native granediers, and a battalion company of the 3rd, the whole line being close to them, disposed to the right and left, to keep down the enemy's fire. They advanced with alacrity, under the heaviest fire imaginable, from the curtains and five or six bastions, the defences of which we hat not been able to demolish our men feel rapidly, but nothing impeded their approach, even the hedge was speedily passed and repeated attempts were made to surmount the breach but all in vain. Every man who succeeded in reaching the summit was instantly thrown back, pierced with wounds, from both pikes and musquetry and no footing could be gained. At length a retreat was ordered and truly dismal scene of harror succeeded, all our killed and many of the wounded being left at the foot of the breach, over which the enemy immediately spring and pursued the rear while others pierced the bodies both of the dying and the dead.

The immediate defence of the breach was with pikes, from eighteen to twenty feet long behind which a body of men frain on elevated spot,

kept up a constant fire, whilst others in the bastions took the assailants in flank. In the confusion of moment a hourtzer was left near the breach, which was afterwards rescued by six Officers and about fifty sepoys, under a fire, which killed one of the officers and several of the men and wounded two other officers and five or six men. And here let me record the personal bravery and devotion of captain Nicholas Mathew Smith, the first man who reached the gun and whose example stimulated the rest, he was a fine honest fellow and a good soldier, but with the noble James Grant and several others, he has since paid the delet of nature. Our total loss this day was four officers and forty nine men, killed and thirteen officers and two hundred and fifty four men, wounded; besides several slight cases, not reported. Of the enemy's loss we had no account. No sooner had we gained a safe distance from the fort, than the line was formed, and encamping ground marked out, the nearest part being at a distance of 1,500 yards from the walls. We had a high ridge in the centre of the line, running parallel to the fort, and our ammunition and stores were placed in the rear out of sight of the enemy: Our picquets were posted on the bank from whence we first attempted to breach and it was completely dark before we could get under cover.

As all had a like partakers in all dangers and discomfiture of the day, a dead silence reigned throughout our line, the only tribute we could then pay to the memory of our departed brethern, and the enemy so far respected our grief, as to allow us it's unmolested indulgence.

To a mind accustomed to think our total failure of this day was perfectly inexplicable and how the breach was defended appeared almost miraculous for none of the actual defenders over showed themselves above the broken parapet, and certainly that was entirely destroyed and a practicable passage apparently made to the terre plein of the bastion, long previous to our attack. Yet here a grove of pikes alone presented itself to our view; and the enemy appearing in every other part of the works, exposing themselves without the smallest reservation, were constantly shot by our men, who were covering the storm, and as constantly shot by our men, who were covering the storm, and as constantly replaced by others; whilst they kept up a most unnatural yell the whole time, from upwards of five thousand voices, which only ceased with our retreat. Of one hundred and twenty Europeans on the storming party only forty six escaped unhurt, and including Officers and artillery, one hundred and six were killed and wounded of the whole force. This was so very large a proportion as to make the duty come heavy on the survivors for a considerable time, when our disheartened men required a constant and undeviating example of that cheerful devotedness to their duty which can alone secure the confidence of soldiers in times of unusual diffity and danger.

Of the 74th regiment, Lieutenants Campbell and Shanks were killed, Captain Campbell mortally wounded. Lieutenant Fletcher badly. Of the 3rd, Lieutenant Egan killed, Major sheppard, Lieutunant Greaves and Doctor Barter wounded. Of the 4th Lieutenant Magnell killed and Lieutenant Clapham wounded. Of the 9th Lieutenant Torriano mortally and Captain Hazard wounded. Of the 1st battalion of the 14th, Lieutenants Elliot, Brown, Wright and M'Cay, wounded. I should have mentioned, that a body of one thousand Eteapoor poligars, hereditary enemies of the Panjalumcoorchy race, had joined us on the March, having a company of sepoys and captain Charles Trotter attached to them. These brave and faithful allies made some unsuccessful attempts at an escalade on the other side of the fort whilst we were on the west face, but were repulsed with considerable loss though we had no official returns of their casualties. This circumstance alone proves how numerous the defenders must have been.

The 1st of April was ushered in with the painful re-collection that many of our late gay and cheerful companians were lying at the foot of breach unburied and a flag of truce was consequently sent to the fort, to entreat permission to remove and intern our dead. This was kindly and unconditionally accorded and we then collected the disfigured and gory bodies and buried them in the evening, with military honours, the enemy, setting us a bright example of humanity, made not the smallest attempt to disturb us and we enjoyed a good night's rest, that of the preceding having been anything but refreshing.

Perfectly convinced that our present measures were utterly inadequate to the capture of a place so defended Major Macaulay, who had shared every danger with his troops and luckily came off unhurt, determined to turn the siege into a blockade, as far as the actual state of affairs would permit and thus await reinforcements, particularly of battering guns and ammunition, for this purpose, the pioneers, dooly-bearers, and lascars, were employed to make temporary shelter for the arms of the men on duty, with small breast, works and C.; and the camp was regularly formed, in an oblong square, having the ridge in the centre, with a high tank bank in the rear, a tank of fine water on the left and a larger one, for watering cattle on the right.

The 2nd April passed in quiet, excepting that the poligars several times called out, when any of us approached and demanded an amnesty, declaring their readiness to obey the British Government, and pay their kists, but protesting against the imprisonment of their chiefs. The reply we were instructed to give us was, that "we could not treat with rebels in arms, that they must deliver up all their chiefs and lay down their arms unconditionally. This evening, while sitting at dinner, we were

suddenly saluted about eight O' Clock by a shower of bullets and found the enemy determined to keep us employed. It was remarkably dark, and we were not fully aware of their numbers and intentions till the moon rose, when they were perceived retiring, after having wasted a good deal of ammunition and wounded Lieutenant Lyne of the cavalry very severely and five men in our camp.

From this time till 22nd, nothing occurred worth notice. We had daily skirmishes, in which a few men fell on both sides and our Pioneers and C. were busily employed in strengthening our outposts, and in raising a kind of breast work, to resist cannon shot, which the enemy sent into our camp from some old guns, drawn out under the walls of the fort for that purpose. At noon, this day, a heavy thunder-storm accompanied by wind and rain, suddenly assailed us and as such a time was the most favourable in which to oppose pikes to fire-arms, we began to fall-in, when in a twinkling, the thunder was succeeded by the flash and sound of our six-pounder on the most distant outpost and a strong party dashed towards it immediately. This post consisted of a Company of Sepoys with a party of artillery, and one gun on the bund of a large tank, five or six hundred yards to the south ward of the fort, and one thousand two hundred from our nearest post. Lieutenant H. Dey who had been ordered down, with a company of the 3rd, to relieve a similar party of the 9th under Lieutenant Clason, noon being the time of removing all our outposts observing an unusual collection of clouds and sagaciously auguring there from the probability of a storm, being senior officer, had very sensibly taken upon himself to detain the other company. The squall approached, beating in their faces, and was immediately followed by one thousand pikeman. Our poor fellows, assailed by two such enemies at once, strove to give a fire, but hardly a musket would go off, and the gun after being discharged once only, was in the enemy's possession. The poligars more intent on seizing the ordinance than on injuring its defenders wounded only eight men of the party and were pushing off with their prize as fast as the wet cotton ground would permit, when our reinforcements appearing Lieutenants Dey and Clasoo rushed back accompanied by many of their men and we succeeded in reserving our Cannon from the hands of the Philistines although many hundreds more rushed out of the fort to their assistance and as the rain ceased, they poured our multitudes with fire-arms who being confronted as readily by similar parties from our camp a general action ensued, which I may well say, ended in smoke, both parties making much noise, and neither doing much execution. After about an hour's fighting, as if with one accord, the firing ceased, both parties retired to count their casualties, of which the most serious tally must have been ball cartridges.

This night about nine O'Clock we were roused by another thounder-storm, when all hands were again beat to quarters. In a short time faint flashes of fire-arms could be disearned through the gloom, in the direction of all our outposts and now and then the report of a cannon added to the horrors of darkness. A general attack with pikes was now anticipated in every part of the line and no one could tell what was going on, on either side of him. Our anxiety was to preserve the arms from damp, but this, from the violence of the rain, proved impossible and all stood wet to the skin, enjoying, in delightful anticipation, a thrust through the body from a pike, as sharp as a razor and only twenty feet long. At this critical juncture a body of two or three hundred men came rushing on the line with dreadful cries and were within an inch of being treated as enemies when they were discovered to be pioneers hascars, and coolies who had been at work on an intended battery within four hundred and fifty yards of the fort, and to their eternal disgrace, a few sepoys who had shamefully abandoned their posts in terror and dismay; these latter were instantly placed in confinement. The pioneers had been exposed without arms or any protection, had been actually assaulted in the battery and their sand bags and c, carried off in triumph, nor was it indeed intended that they should attempt to defend themselves. In about two hours the weather cleared up and though the numbers of the enemy, who had sallied forth, could not be ascertained, yet tranquillity was then restored and not again distrubed that night.

The next day, having only seen three faces of the fort, Major Macaulay, determined on a strong reconnoissance, and proceeded round it, out of reach of musquetry from the walls, accompanied by the cavalry and the 1 st battalion of the 3rd regiment. The enemy, ever on the alert, manned the walls, and sent a few cannon shot among us, but did no damage, as they seemed to apprehend an assault on the opposite face, but we had no sooner passed, than they bagan to come out, and attempted to impede our return though too late to interfere with our real design. The cavalry having now, four six-pounders as gallopers, therefore, merely gave them a few rounds and then we retired at leisure.

From this time till the 19th of May, nothing remarkably occurred. Every two or three days, skirmishes, provoked by our followers ended in nearly the same manner as those already mentioned and we daily lost some men without being sure of the damage done to the enemy. Altogether, indeed, we lost about sixty in this quiet period, which considering all matters, was a very small proportion, for the poligars had now brought a nine-pounder and a three to bear upon us which they plied from the traverses of the north and south gates and much were we indeleted to

providence for the numerous escapes made in a crowded camp through which the shot ranged from front to rear, without doing much damage. During this time, however, we were not idle ourselves, since our cannon daily sent a few dozens of heavy shot into the fort which we flattered ourselves could not fail to do execution. We also constructed to tower twenty paces long and fifteen broad. within six hundred yards of the western face, which being about sixteen feet high, might likewise answer as a breaching battery. Here we place a guard of sixty men and it was an object of much jealousy to the enemy who did all they could to retard it's progress. It was about one hundred and fifty yards from the old work, which the enemy destroyed on the night of the 22nd of April and when completed, the two twelve pounders were mounted in it. About this time we got accounts of the approach of Lieutenant Colonel Agnew, with reinforcements, and on the 21st of May he arrived with Captain John Munro, Major of Brigade and Captain Marshall, Private Secretary and personal Brigade-Major and immediately determined on the point of attack. We were fired on while reconnoitering and had two men wounded. On the 22nd his Majesty's 77th regiment, under Lieutenant Colonel Spry, a Company of artillery under Captain Sir John Sinclair, three campanies of the 1st battalion of the 7th Regiment under Captain C. Godfrey and four Companies of the 1st battalion of the 13th regiment under Captain Townsend, also joined our Camp, with four iron eighteen pounders, two five and a half and two four and a half inch hovitzers and adundance of ammunition. In addition to which, the 1st regiment of hight cavalry under Captain J. Doveton and one hundred and fifty Malays under Captain Whitley also arrived this evening. On the 22nd of the Colone having again reconnoitred with Sir John Sinclair and Lieutenant Bradley of Engineers, determined on our post on the South bank, for a breaching battery, three people were killed by cannon shot this day and we got the four eighteen-pounders and two hovitzers with two six pounders into the battery.

I must here mention that our fellow-soldiers who arrived yesterday, held the fort and enemy in much contempt and seemed to think that we had not previously done our duty.

On the morning of the 23rd of May at sun-rise, we opened two batteries at once, on the south, western bastion of the fort. Our tower breaching and C. with two twelve pounders and two howitzers; while the grand battery favoured them with salvos which soon demolished the southern faces and salient angle of the bastion. By noon, the storming party was ready to advance, but our old Commandant took colonel Agnew aside and backed by another old friend persuaded him to delay the assault until the next day, much against what appeared to him his better judgment. The firing was therefore kept up all night

to prevent the enemy from repairing the breach. The next morning the guns were all turned to demolish the defences, and cut off the breached bastion, which being completely effected, at one O'Clock P.M. having run the tower guns half way down to the fort, the storming party was ordered to advance.

It consisted of the granadiers, and a battalion company of the 74th regiment, the granadiers' light company, and a battalion company of the 77th, the granadiers of the 3rd, 4th, 7th, 13th and 14th regiments, the Malays and a detachment of the 9th.

Notwithstanding this formidable array, with the whole force ready to back them, the defenders shrunk not from their duty, but received our brave fellows with renewed vigour and the breach was so stoutly defended, that although the hedge was passed in a few minutes, it was nearly half an hour before a man of our's could stand upon the summit, while bodies of the enemy, not only fired on our storming party from the broken bastions on both flanks but others sallied round and attacked them in the space within the hedge. At length, after a struggle of fifteen minutes in this position, the whole of the enemy in the breach being killed by hand-granades, and heavy shot thrown over among them, our granadiers succeeded in mounting the breach and the resistance afterwards was of no avail, although one body of pikemen charged our granadiers in the body of the place and killed three of them. Our cavalry now under the command captain Doveton, with James Grant barely recovered from his wound, had been posted with four gallopers, near the eastern face to arrest the fugitives.

A general panic now seized the enemy and they fled from their assailants as fast as possible. But no sooner had they got clear of the fort, than they formed into two solid columns and thus retreated, beset, but not dismayed, by our cavalry, who attacked them in flank and rear and succeeded in cutting off six-hundred. The remainder, however, made good their retreat and a column of about two thousand ultimately escaped. Four hundred and fifty dead bodies of the enemy were also found in the fort, those killed on former occasions having been disposed of outside to the eastward.

Our loss on this day was Lieutenant Gilchrist; of the 74th, a remarkably fine young man, and a most gallent soldier, who had distinguished himself so much as to be beloved by the whole force. Lieutenants Spalding and Campbell of the 77th and Lieutenant Fraser of the 4th killed. Lieutenant M'Clean, Scotch Brigade, Captain whitleo of the Malays, Lieutenant Valentine Blacher of the 1st Cavalry ; Lieutanant Campball of the 74th and Lieutenant Birch of the 4th sounded. Lieutenant Blacker

was piked in two or three places, but emulating James Grant, who was always the foremost in danger, he would not desist, until our trumpets had sounded the recall. Europeans killed nineteen, and wounded seventy six. Natives killed twenty four and wounded ninety six making a total including Officers of two hundred and twenty three.

To us, who had suffered so severely in our unsuccessful assult, a sight of the interior of this abominable dog-kennel was most a acceptable, the more so, as this was the first time it had even been taken by storm, though frequently attempted. Nothing could equal the surprise and disgust which filled our minds at beholding the wretched holes undergound, in which a body of three thousand men and for sometime their families also had so long contrived to exist. No language can paint the horrors of the picture. To shelter themselves from shot and shells, they had dug these holes in every part of the fort and though some might occasionally be out to the east-ward, yet the place must always have been excessively crowded. The north-west bastion, our old breach, attracted our particular attention and description of it will therefore serve for every other in this fort. It was about fifteen feet high on the outside and nearly square; the face we breached was thirty feet long and a parapet of about three feet thick at the summit, gradually increased sloping down into the centre, which was barely sufficient to contain about forty men the passage in the gorge being only wide enough to admit two at a time. The depth in centre, being originally on a level with the interior, was increased as the top mouldered down, so as to leave the defenders entirely sheltered from everything but the shells and shot, which we had latterly used more by accident than design. These were of course, thrown over from the outside and northing else could have secured us the victory, since every man in the last breach was killed and the passage blocked up before our granadiers obtained a footing above. Their long pikes, used in such a sheltered spot, must be most powerfully effective. No wonder, then that every man who got to the top was instantly pierced and thrown down again. He could never get at his enemy, and indeed could scarcely tell from whence the blow was inflicted. The system of defence adopted by these savages would have done credit to any engineer. Nothing could surpass it but their unwearied perseverance. Had the bastion been solid or their defensive weapons only musquets and bayonets, we should not have had mortification to lie before it for two months and had our cavalry been more efficient we should not have had a continuance of this warfare for six months longer. The fugitive phalant, making good it's retreat to Sherewele, was there joined by twenty thousand men of the Murdors.

Before I quit this place for ever, my plans and sketches being the only memorials of it that now exist for it was razed to the ground and

ploughed all over but a few months afterwards, I must pay a parting tribute to the memory of one of the bravest and most cheerful fellows I ever knew. Michael Egan, one of the first day fell pierced through the body and we all thought him dead. When the retreat was sounded and a rush not the most creditable, was made in opposite direction, I was employed in supporting or rather carrying off a wounded granadier of the 74th on looking behind me, I saw poor Egan rise from the ground and run a few yards pursued by pike-men. The first impulse might have left me by his side but where I could reach the spot, he was piked through and through and feel to rise no more in this world. His mangled body was wept over next morning, not only by his brother officers, but by every native officer and sepoy of the corps. Michael Egan was a manly honest, and liberal fellow with a frame of iron and wanting only a little more education to have insured a rapid advancement in the world. As, living, he was beloved by every man who knew him, so he was lamented by them dead, and the friend who now with an aching heart attempts to record his worth paid the last sad tribute to his remains when entered on the field of battle.

Having already introduced one native soldier to the reader, I cannot close the Panjalam coorchy annals, without marking mention of another equally distinguished and equally unfortunate in the successor to Subadar Sheik Edraum of the bodyguard. His name has escaped me, but his conduct is engraven on my memory, never to be forgotten emulating his noble commander, now much enfeebled by his wound but still the foremost amongst the enemy, this native offiicer pierced through the whole column more than once, cut down four or five of the enemy himself and at last fell covered with wounds and was afterwards found perfectly lifeless. I could mention many others but they would extend my journal to an unressonable length, not having, however done our Eteapoor allies sufficient justice. Considering the share they took in the whole service, I shall conclude this part of my narrative with the death of one of their chief. Mortally wounded, he desired that his body might immediately be carried to Major Macaulay, who was at the time surrounded by his English Officers. The old man who was placed upright in a chair, then said with a firm voice "I have come to show the English how a poligar can die". He twisted his whiskers with both hands as he spoke and in that attitude expired.

The three companies of the 9th, under Captain Hazard being left with the pioneers to destroy the fort, a work by no means to be enviyed on the 25th of May, the Company of the 16th, under Captain M' Donnell, was sent ten miles off to garrison Tutucorine, which the enemy had abandoned.

குதிக்கும் தலை

செல்வி நா. மார்க்சீய காந்தி, M.A., Dip. Epgy. & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

தருமபுரி மாவட்டத்தில் ஒரு பலகைக் கல், அதில் ஒரு மனித உருவம், கும்பிட்டு அமர்ந்த நிலையில்; தலையின் மேலிருந்து கீழ் நோக்கி வரும் வளைந்த கழியொன்று; அது தலைமுடியுடன் மேலே பிணிக்கப்பட்டுள்ளது. எதிரில் யானை மீதமர்ந்து வரும் ஒருவர், கையில் நீண்ட வாளுடன் காட்சியளிக்கிறார். தலைக்கு மேல் வெண்கொற்றக் குடையும் உள்ளது.

இக்காட்சியின் மேற்புறம், கன்னட எழுத்துக்களும் உள்ளன. இக்கல்வெட்டு எதைக் குறிக்கிறது? இக்காட்சி எதைக் காட்டுகிறது? கன்னட நாட்டில் (கர்நாடக மாநிலத்தில்) இதுபோன்ற கல்வெட்டுக்கள் ஆங்காங்கு காணக்கிடைக்கின்றன அங்கு இதனைச் 'சிடிதலெ' என்று குறிக்கின்றனர். குதிக்கும் தலை என்பது அதன் பொருள். ஏனிந்தப் பெயர் இதற்கு?

மன்னன் வெற்றியைப் பெற வேண்டும் என்று வேண்டுகிறான் வீரன்; தான் தலையரிந்து தருவதாகவும் உறுதி கூறுகிறான்; தலையரிந்து கொடுக்கும் போது ஒரு முறை கையாளப் பெறுகிறது. வீரன் ஒரு மூங்கிலை வளைத்து அதனோடு தன் தலையைப் பிணித்துக் கொள்கிறான். தான் வணங்கிய நிலையில் அமர்ந்து கொள்ள, அவன் தலை துண்டிக்கப் பெறுகிறது. வளைத்த மூங்கில் நிமிர்கிறது; அதன் வேகத்தில், துண்டிக்கப் பெற்ற தலை துள்ளிக் கொண்டு மேலே செல்கிறது. எனவே தான் இதனைக் 'குதிக்கும் தலை' என்று கூறினர் போலும்! இக்காட்சியே இங்கு கல்லில் வடிக்கப் பெற்றுள்ளது.

இது போன்ற செய்தியினை மணிமேகலையில் 'சக்ரவாளக் கோட்டமுரைத்த காதை'யிலும், கலிங்கத்துப் பரணியில் 'கோயில் பாடிய' பகுதியிலும் காண்கிறோம்.

உலையா உள்ளமொடு உயிர்க்கடனிறுத்தோர்
தலை தூங்கு நெடுமரம் (வரி : 50-51)

இங்கு தலைகள் தொங்கிக் கொண்டிருக்கும் உயர்ந்த மரங்கள், காளி கோயிலின் அருகில் உள்ளன என்று குறிப்புள்ளது. 'தலைதூங்கு நெடுமரம்' என்பதற்கு, உ. வே. சாமிநாதய்யர் அவர்கள், 'பலிகொடுப்போர் சிகையை மரத்தில் முடிந்து விட்டுத் தலையையரிந்து, துர்க்கைக்குப் பலி கொடுத்தல் மரபு' என்று குறிப்பிடுகிறார். இதற்குப் பின் வந்த கலிங்கத்துப் பரணியில்,

வீங்குதலை நெடுங்கழையின் மிசைதொறுந்
திசைதொறும் விழித்து நின்று
தூங்குதலை சிரிப்பன கண்டுறங்குதலை
மறந்திருக்கும் சுழல்கட் சூர்ப்பேய் (117)

அரிந்ததலை உடனமர்ந்தே ஆடுகழை
அலைகுருதிப் புனலின் மூழ்கி
இருந்தவுடல் கொளக் காலன் இடுகின்ற
நெடுந்தூண்டில் என்னத் தோன்றும் (118)

எகிரி மங்கலம்

G. C. பட்டாபிராம்,
திருச்சி.

திருச்சியில் இருந்து 6 கல் தொலைவில், உறையூர், குழுமணி வழியில் சாலையில் இருந்து பிரிந்து அரை கல் தூரம் சென்றால் உள்ள ஊர் இது. இங்குள்ள இறைவன் திருமாங்குளதீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். இக்கோயில் முற்காலச் சோழர் பாணியில் அமைந்தது.

இங்குள்ள கல்வெட்டுக்கள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. கோயிலின் அதிஷ்டானம், மண்மேட்டினுள் புதைந்துள்ளது. எனவே அதில் உள்ள கல்வெட்டுக்களைப் படித்தறிய வாய்ப்பில்லை. அறிய இயன்ற அளவில், 'உறையூர் கூற்றத்துப் பிடாகையூர்' என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த ஊருக்கு அருகில் உள்ள பெருங்குடி அகத்தீஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டிலும் 'மேலப் பிடாகையூர்' என்ற குறிப்பினைக் காண்கிறோம். இவ்விரு கோயில்களும் ஒரே பாணியில் அமைந்தவை; ஒரே காலத்தனவாகலாம்.

கோயிலுக்கு அருகில் அழகிய சோழர் கால நந்திகள் பல கிடக்கின்றன. இவை விமானத்தில் இடம் பெற்றிருந்தவையாக இருக்கலாம். அழகிய துவார பாலகர் சிலைகளை வாயிலில் காண்கிறோம். கோஷ்ட தெய்வங்களும் உள்ளன. தென்புறக் கோஷ்டத்தில் திரிசூலமும், அக்ஷமாலையும் ஏந்தி நின்ற நிலையில் தக்ஷிணாமூர்த்தி உருவம் உள்ளது. மேற்குப்புறக் கோஷ்டத்தில் ஒரு கையில் சங்கையும், மற்றொரு கையில் அக்ஷமாலையும் ஏந்தியுள்ள உருவம் ஒன்று உள்ளது. இது ஹரிஹரனின் படிவமாக இருக்கலாம். வடபுறக் கோஷ்டத்தில் நிற்கும் உருவம் மூன்று தலைகளுடன் காட்சியளிப்பினும், கைகளில் சங்கையும், பிரயோகச் சக்கரத்தையும் ஏந்தியுள்ளது. இவ்வுருவம் யாரென அறிய இயலவில்லை.

சிவன் கோயிலின் எதிரில் ஐயனார் கோயிலொன்று உள்ளது. இரு தேவியருடன் அமர்ந்திருக்கிறார். கோயிலின் எதிரில் உள்ள யானையின் சிற்பமும் அழகானது. இச்சிற்பங்களைச் சிவன் கோயிலுக்கருகில் இருந்து எடுத்து வந்து தனியாகக் கோயில் கட்டி வைத்துள்ளனர் என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். சிவன் கோயிலில் ஆகம விதிப்படி பூஜை நடைபெறுகிறது.

கலை வல்லுநரும், ரசிகர்களும் ஆய்வு செய்யவும், அழகை அனுபவிக்கவும் ஏற்ற கோயில்களுள் இது ஒன்று.

இங்கு முதற்பாடலில், தலைகள் தொங்கும் நீண்ட மூங்கில் மரங்கள் என்றும். இரண்டாம் பாடலில் அரியப்பட்ட தலைகள் குருதிச் சொட்டத் தொங்கும் மூங்கில்கள் அசைகின்றன என்றும் குறிக்கப்படுகின்றன. எனவே மூங்கிலில் தலையை முடிந்து அரிந்து, காளிக்குப் பலி கொடுக்கும் மரபு தமிழகத்தில் பண்டு இருந்தது; அதனையே, இச்சிற்பமும் கல்வெட்டும் குறிக்கின்றன என்பது தெளிவு.

இக்கல்வெட்டு இன்னும் படித்து முடிக்கப் பெறவில்லை ஆயினும், அம்மரபைக் காட்டுவதும், அவ்வாறு பலி கொடுத்த வீரன் ஒருவனுக்காக எடுக்கப்பட்ட நினைவுக்கல் என்பதும் வெளிப்படை.

திருப்பணிமாலையும் வரலாறும்

இரா. நாகசாமி

தமிழ் நாட்டுப் பெருங்கோயில்கள் பலவற்றில் நடைபெற்ற திருப்பணிகளை எடுத்தியம்பும் பாடல்த் தொகுப்புக்களே திருப்பணிமாலை என்னும் நூல்கள். திருப்பணிகள் முடிந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர் இவை ஆக்கப்பட்டவை. இவை செவி வழிச்செய்திகளைக் கூறுகின்றவா? உண்மை வரலாற்றுச் செய்திகளைக் கூறுகின்றனவா? கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளை இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா என்ற பல கேள்விகள் எழுகின்றன.

மதுரைத் திருக்கோயில்ப் பணிகளை எடுத்துரைக்கும்திருப்பணிமாலை ஒன்றுண்டு. அதில் கிருஷ்ணவீரப்பநாயக்கரின் திருப்பணிகளைக் கூறும் மூன்று பாடல்கள்:

விதிக்கு முகுந்தற்கு மெட்டாத சொக்கர்க்கு மேதினியோர்
துதிக்குங் கொடிக்கம்ப மண்டப மொன்று துலங்கச் செய்தான்
கதிக்கும் பரமன்னர் பொன்னுர் முடிகளைக் காலிலெற்றி
மதிக்குங் கடாசலத் தான்கச்சி வாழ்க்ருஷ்ண வீரப்பனே

ஐயர்சிங் காரச் செழுநீர்ப் புனல்வெள்ளி யம்பலமுஞ்
செய்ய வடக்குத் திருக்கோ புரமுஞ்செவ் வீச்சுரமுந்
துய்ய திருமடைப் பள்ளியு மன்புடன் றேன்றச்செய்தான்
தையலர் மோகன வேள்கிருஷ்ண வீர சயதுங்கனே

வாரிப் புவிபுக ழாயிரக் கான்மணி மண்டபமு
மேருற்ற மூர்த்தியம் மன்மண்டபமு மிரண்டாம் பிரா
காரத் திருச்சுற்று மண்டப முங்கொடிக் கம்பத்துமுன்
வீரப்ப மண்டப முஞ்செய் தனன்கிருஷ்ண வீரப்பனே.

சொக்கர்க்குக் கொடிக்கம்ப மண்டபம் செய்ததை ஒரு பாடல் காட்டுகிறது. சிவபெருமானின் பல்வேறு தோற்றங்களையும், உலகப் புகழ் பெற்ற மீனாட்சி திருக் கல்யாணச் சிற்பத்தையும் கொண்ட சுந்தரேசப்பெருமானின் கொடி மண்டபமே இது. (கொடிக்கம்ப மண்டபம் 1877ல் வைநாகரிக நகரத்தார்களால் புதுப்பிக்கப்பட்டது) இதன் எதிரில் சுமார் 7 அடி உயரமுள்ள காளி, ஊர்த்வதாண்டவர்சிலை, அக்னி வீரபத்ரர், அகோரவீரபத்ரர் சிலைகள் உள்ளன. இம்மண்டபத்தூண் ஒன்றில் கீழ் வரும் கல்வெட்டு உள்ளது. ''சுபமஸ்து சகாப்தம் 1505-ன் மேல் செல்லா நின்ற சுபானு வருஷம் தைமாதம் ஒன்றும் தேதி விஸ்வநாதநாயக்கரய்யன் குமாரன் கிருஷ்ணப்பநாயக்கரய்யன் குமாரன் வீரப்பநாயக்கரய்யன் கட்டுவித்த மண்டபம்'' இக்கல்வெட்டு தெலுங்கு மொழியிலும் தமிழ் மொழியிலுமாக எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து இம்மண்டபம் சகம் 1505 (கி. பி. 1583—4)-இல் கட்டப்பட்டது என்பதும்; கிருஷ்ணப்ப நாயக்கர் மகன் வீரப்ப நாயக்கர் கட்டினுர் என்றும் அறிகிறோம். திருப்பணிமாலையில் குறிப்பிட்டுள்ளதைக் கல்வெட்டு உறுதி செய்கிறது. (கிருஷ்ணவீரப்பன் என்று பாடல் கூறுவதை திரு. அ. கி. பரந்தாமனுர் கிருஷ்ணப்ப நாயக்கரைக் குறிக்கும் என கூறுகிறுர். கிருஷ்ணவீரப்பன் என்பது கிருஷ்ணப்பன் மகன் வீரப்பனையே குறிக்கும்.) இதிலிருந்து திருப்பணிமாலை குறிப்பிடும் செய்தி உண்மை வரலாறே என அறியலாம்.

இதுபோன்ற திருப்பணிமாலை இலக்கியங்கள் இதுவரை சரிவர ஆயப்படவில்லை. அவற்றையும், வரலாற்றுச் செய்திகளையும் கல்வெட்டு இதழ் ஆய இருக்கிறது.

நூல் ஆய்வு

சிலப்பதிகாரத் திறனாய்வு: சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்
பூங்கொடி பதிப்பகம், சென்னை-4. :: விலை ரூ. 12-00

'கம்பரும் இளங்கோவும் தமிழினத்தின் இருகண்கள். இந்த இரு கண்களில் எந்த ஒரு கண்ணைக் குத்திக் கெடுத்தாலும் தமிழினம் குருடாகி விடும். தமிழ் வளர தமிழினம் வாழ இந்த இரண்டு கண்களும் தேவைப் படுகின்றன,' என முழங்குகிறார் சிலம்புச் செல்வர் ம பொ. சி. சிலம்பில் தோன்றும் ஒவ்வொரு ஒலியும் நெஞ்சைக் கொள்ளை கொள்ள எழும் இசைப் பண்ணின் அலையாகத் தோன்றிக் காப்பியச் சுவையை அளிக்கும் ஒப்பரும் பண்ணைக முழுமையாய் இயைந்து நிற்பதை இந்நூலில் எடுத்துக் காட்டு கிறார். பண்பட்ட உள்ளம் ஆதலால் இலக்கியத் திறனாய்வையும் எவ்வாறு பண்புள்ளத்தோடு ஆயலாம் என வழி காட்டியுள்ளார். ஆசிரியர் காலத்தால் பிற்பட்ட தண்டியலங்காரத்தைக் கொண்டு முற்பட்ட சிலப்பதிகாரத்தை அளக்க முயல்வது சரியல்ல என்று கூறும் போது வரலாற்று நெறியில் காப்பியங்களை ஆயவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். காப்பியச் சுவையை அணுஅணுவாக அனுபவித்த ரசிகர் சிலம்புச் செல்வர் கூறுகிறார்: "சேரன் செங்குட்டுவனின் வடபுலப் படையெடுப்பு வரலாறு அல்ல; இளங்கோவின் கற்பனைதான்" (பக் 353). சிலப்பதிகாரத்தில் எழும் பல்வேறு காட்சிகளையும் எடுத்து ஒவ்வொன்றையும் ஆசிரியர் இலக்கிய ரீதியிலே ஆய்கிறார். ஆசிரியர் வகுத்துக் கொண்டுள்ள வழி முற்றிலும் புதியது. பல நவீன இலக்கிய ஆய்வுகள் போல வறட்டு ஆய்வு அல்ல. சுவைததும்ப, அதே சமயத்தில் வரலாற்று நெறியில் வழுவாது, காப்பியம் படைத்த கவிஞனின் உள்ளக் கிடக்கைகளை-காப்பியத்தின் உயிர்நாடிகளை-உள்ள வாறே பிரதிபலிக்கும் அருமை நிறைந்த ஆய்வு. இலக்கியம் சுவைத்தோரும், வரலாற்று வல்லுநர்களும், இன்றைய விஞ்ஞான நெறியிலே இலக்கியத்தை அறிய விழையும் இளைஞர்களும் ஒருங்கே வரவேற்கும் படைப்பு. இலக்கியத் திறனாய்வுக்குப் புதிய நெறிகாட்டும் இவ்வாய்வு நூல் வரலாற்றில் இடம் பெற்று விட்டது எனக் 'கல்வெட்டு' கூறுகிறது.

EARLY CHOLA ARCHITECTURE AND SCULPTURE BY DUGLAS BARRET;
FABER AND FABER LIMITED; LANDON
பக்கங்கள் 142 படங்கள் 99 விலை ரூபாய் 400-00

தமிழ்நாட்டுக் கலைகள் பற்றிய ஆராய்ச்சியில் மேலைநாட்டோர் பலர் ஈடுபட்டு உள்ளனர். அவர்களில் லண்டன் மாநகர் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் இந்தியப் பிரிவின் தலைவர் டக்ளஸ் பர்ரட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் இவர் சோழர்களது கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல கோயில்களுக்கு நேர்முகமாகச் சென்று கண்டறிந்தவர். இதற்கு முன்னர் சோழர்களது செப்புத் திரு மேனிகள் பற்றி சிறந்த நூல் ஒன்று எழுதியிருக்கிறார். "Early Chola Bronzes" என்ற அந்த நூல் அனைத்துலகிற்கும் சோழர் கலையின் பெருமையை எடுத்தியம்பியது. இப்பொழுது சோழர்களது கட்டிடக் கலையையும் சிற்பக்கலையின் சிறப்பையும் மிக அழகாக இந்நூலில் எடுத்துரைக்கிறார். மிகப் பெரிய அளவில் அச்சிடப் பட்டுள்ள இந்நூலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 99 படங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலை நாட்டிலேயே அச்சிடப்பட்டுள்ள நூல். சோழர் கலை அனைத்துலகக் கலையாகப் பரிணமித்துள்ளது என்பதற்கு இந்நூல் ஒரு சான்று.

STUDIES IN INDIAN EPIGRAPHY–Journal of the Epigraphical Society of India Vol. II

GEETHA BOOK HOUSE, MYSORE-1

பக்கங்கள் 155   ஆண்டு சந்தா ரூபாய் 15-00

இந்திய நாட்டின் கல்வெட்டுக்களை ஆய்வதற்கென 'அனைந்திந்திய கல்வெட்டாய்வாளர் கழகம்' என்னும் பெயரில் ஒரு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் இந்நாட்டில் தலை சிறந்த கல்வெட்டாய்வாளர்கள் அங்கத்தினர்களாகிச் சிறப்பிக்கின்றனர். கழகம் அமைக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. அண்மையில், தார்வாரில் இக்கழகம் கூடியது. கல்வெட்டாய்வாளர் பலர் அங்கு கூடி பல சிறந்த கட்டுரைகளை வழங்கியுள்ளனர். ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இக்கழகத்தின் முதலிதழ் வெளிவந்துள்ளது. நல்ல கட்டுரைகளைச் சிறந்தோர் எழுதியுள்ளனர். தொடர்ந்து இவ்விதழ் வெளிவரும். இவ்விதழைக் 'கல்வெட்டு' வரவேற்கிறது. வடகிழக்கிந்திய பால அரசர்களின் சமயப்பற்றை டி. சி. சர்க்கார் ஆய்கிறார். உமாமகேச்வரர் சிலைக் கல்வெட்டு டாக்டர். காய் அவர்களால் ஆராயப்படுகிறது. ஸ்ரீபுருஷனின் ஹொன்னுடிகே கல்வெட்டு பற்றி லஷ்மிநாராயணராவும், வடக்கு சிலாஹாரர்களின் தலைநகராகப் பூரி இருந்தா என V. V. மிராஷியும் எழுதியுள்ளனர். திரு. கே. ஜி. கிருஷ்ணன் தமிழ் நாட்டுப் பிராம்மிக் கல்வெட்டுப் பற்றி எழுதியுள்ளார்.

AN INTRODUCTION TO THE HISTORY OF TAMIL LITERATURE BY M. ARUNACHALAM

GANDHI VIDYALAYAM, TIRUCHITRAMBALAM–1974, Rs. 40-00

வடமொழிக்கு ஒரு மாகச்மூலர் தோன்றினர். வடமொழி நூல்களில் இன்றி அமையாத பலவற்றை மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்த்துத் தந்தார். அதன் பயனாய் மேலைநாடு இந்திய இலக்கியங்களில் ஆர்வம் கொண்டது ஆனால் தமிழ் மொழி நூல்கள் இன்னும் மேலை நாடுகளுக்குச் சரிவர அறிமுகப்படுத்தப்படவில்லை. அது நமது குறைபாடே. நமது நூல்கள் பிறமொழியில் வெளிவரத் தொடங்கினால் தான் நமது பெருமையை–சிந்தனைச் செழுமையை பிறர் போற்றத் தொடங்குவர். பிறமொழியில் நமது நூல்களை எடுத்துரைக்கும் போது–நமது மொழிக் கருத்துத் தொகுப்புகளை அளிக்கும் போது – அவற்றின் உயிர் துடிப்பை அறிந்து எடுத்துரைத்தல் மிகமிக இன்றியமையாதது. அங்ஙனம் பார்க்கின் நமது மொழி வரலாற்றை முழுமையாக எடுத்துரைக்கும் நூல்கள் பிறமொழியில், சிறப்பாக ஆங்கிலத்தில் வராதது நம்மொழிக்குப் பெருங்குறையே. நமது பண்பிலே தோய்ந்து, ஒவ்வொரு இலக்கியத்தையும் முறைப்படி சுவைத்து, அதே சமயத்தில் வரலாற்று நெறிபிறழாது, அதன் தன்மை குன்றாது ஆங்கிலத்திலே ஆக்கித் தந்துள்ளார்கள், தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு அருந்தாண்டாற்றி வரும் திரு மு. அருணாசலம் அவர்கள். பெருங்குறையை நீக்கியிருக்கிறார்கள். இது ஒரு கைவிளக்கு. இவ்விளக்கு பேரொளிக்கு அழைத்துச் செல்லும் பெருவிளக்கு எனக் கல்வெட்டில் பதிக்கிறோம்.

பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை *அவர்கள் மணிவிழா மலர்*

மணிவிழாக்குழு சிதம்பரம்

பண்பு மிக்க நல்லார் திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களின், உயர்குணங்களுக்கு ஏற்ப அமைந்துள்ள இவ்வரும் மலர் நல்லதரமான கட்டுரை இதழ்களுடன்

மணக்கிறது. பெருமை தரும் நூலை மலராக்கிப் பெருமை பெற்ற விழாக் குழுவினர் நமது போற்றலுக்குரியவர்கள்.

சைனரின் தமிழிலக்கண நன்கொடை க. ப. அறவாணன்
ஜைன இளைஞர் மன்றம், சென்னை-7 பக்கங்கள் 482 விலை ரூ. 25.

சமணம் என்றும் அமணம் என்றும் தமிழ் ஆன்றோர்கள் போற்றி வணங்கிய பெரும் சமயத்தோர் தமிழ் இலக்கணத்திற்குச் செய்துள்ள தொண்டு முடிமேல் வைத்துப் போற்றற்குரியது. அவற்றை அரும்பாடுபட்டு தொகுத்துள்ளார் அன்பர் அறவாணர். நல்ல உழைப்பு. எழுத்தில் ஆங்காங்கே வேகமும் உண்டு. விருப்பமும் உண்டு. இவ்வரும் நூலை வெளிக் கொணர்ந்த ஜைன இளைஞர் மன்றத்தாரைப் போற்றுகிறோம்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆதித்தர்

கங்கை கொண்ட சோழீச்சுரத்தில் 9 ஆதவன் சிலைகளைக் கண்டு பிடித்துள்ளதாக மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை அறிவித்துள்ளது. மகாமண்டபக் கோட்டங்களை இவை அலங்கரித்திருக்க வேண்டும். 12 ஆதித்தர்கள், 11 ருத்திரர்கள் ஆகியோரது சிலைகள் கோயில்களில் இடம் பெறுவது பண்டைய மரபு. காஞ்சி கைலாயநாதர் ஆலயத்தில் இவை உள்ளன. இப்பொழுது கங்கை கொண்ட சோழபுரத்தில் கிடைத்துள்ள இவை மேலும் சிலைகள் இருக்கக் கூடும் என்று சுட்டுகின்றன.

அழகர் கோயில் அம்மி

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோயிலில் அம்மி போன்ற சிறிய கற் பீடங்கள் உள்ளன. இவற்றின் பக்கங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. சிம்மங் களும், கடைந்த அணிகலங்களும் இவற்றின் காற்பகுதியை அலங்கரிக்கின்றன. இது போன்ற கற்பீடங்களில் ஒன்றில் கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டில்

"திருமாலிருஞ் சோலை நின்றான் மாவலி வாணாதராயர் உறங்காவல்லி தாஸநு ஆன சமர கோலாகலன்"

கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டில் மாவலிவாணாதராயர்கள் நாயக்க அரசர்களுக்கு அடி பணிந்தவர்களாய்ப் பணிபுரிந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவர் கொடுத்தது போலும் இது.

கேள்விப்படாத தானம்

ச. செங்கல்வராயன்,
அச்சுப்பிழை திருத்துபவர்.
(தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை)

நாம் கதைகளிலும், இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பலவிதமான தானங்களைப் பற்றிய செய்திகளைக் கேள்விப்படுகிறோம்; படிக்கிறோம். கேள்விப் படாத ஒரு தானத்தைப் பற்றி ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

சென்னையை அடுத்த திருவொற்றியூரிலுள்ள ஆதிபுரீஸ்வரர் கோயிலின் வடக்குத் திருச்சுற்றுச் சுவரில் இராஜராஜனின் 19-ஆம் ஆட்சி ஆண்டில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது போரூர் நாட்டிலுள்ள விருகம்பாக்கம் என்னும் சென்னிநல்லூரைச் சேர்ந்த வயலூர்க்கிழவன் திருவேகம்பமுடையான் மகன் செந்தாமரைக்கண்ணன் என்னும் வயிராதராயன் என்பவரால் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தைத் தெரிவிக்கிறது.

அவர் இக்கோயிலைச் சார்ந்த நெல்குத்தும் சாலைக்கு நெல்குத்துவதற்காகப் பெரிய நாச்சி, மாரி, கவுத்தாழ்வி, திருவாண்டி, வடுகாழ்வி, என்னும் ஐந்து பெண்களையும், மற்றும் அவர்தம் வழிவருவாரையும் தானமாக அளித்துள்ளார்.

கல்வெட்டு :

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ திருவாய்க்கெழ்வி முன்பாக திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு ௰௯-வது ஸிம்ஹநாயற்றுப் பூர்வபக்ஷத்து த்ரிதியையும் உத்தரட்டாதியும் பெற்ற நாயற்றுக் கிழமை நாள் ஜயங் கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கொட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுப் பொறூர்நாட்டு விருகன்பாக்கமாந சென்னி நல்லூர் வயலூர்கிழவன் திருவெகம்பமுடையான் செந்தாமரைக் கண்ணனான வயிராதராயனென் உடையார் திருவொற்றிஊருடைய நாயனாற்கு நெற்குறுசாலைக்கு நெற்குறக் கொண்டு விட்ட பெரியநாச்சி யையும், இவள் மகள் மாரியையும், இவள் தங்கை கவுத்தாழ்வியையும், இவள் தங்கை திருவாண்டியையும், இவள் தங்கை வடுகாழ்வியையும், ஆகப் பேர் ஐய்வரையும் இன்னாயனார் நெற்குறு சாலைக்கு இவர்களும், இவ்வழியில் உள்ளாரும், சந்திராதித்தவரை நெற்குறுவதாகக் கொண்டு சிலாலேகை பண்ணிக் குடுத்தென் வயலூர்கிழவன் திருவெ கம்பமுடையான் செந்தாமரைக் கண்ணனான வயிராதராயனென்.

SII Vol. 4 No. 558

இதிலிருந்து அக்காலத்திய கோயிற்களின் வளமையையும், தானமளிக்கும் முறைகளில் ஒன்றையும் நன்கு அறிய முடிகிறது.

A note on the Seven Pagodas

N. S. Ramaswamy

Foreigners appear in Mamallapuram's history in two widely separated epochs. In the first centuries of the Christian era foreign sailors and merchants thronged the port city. The first reference to Mamallapuram in the second epoch of the foreigners, who always called it *Seven Pagodas*, is usually taken to be that dated 1582. But there is good ground for believing that *Seven Pagodas* was known to foreigners even in the fourteenth century. This surmise derives from an expression in Gasparo Balbi's book of voyages pertaining to the visit to Mylapore he paid in 1582. Samuel Purchas translated this particular passage thus, 'About three of the clocke the next morning (May 30, 1582) we came to a place which is called the Seven Pagodas, upon which are eight pleasant hillockes not very high . . . .'

Balbi, Venetian jeweller, came to the east to trade. After staying some time in Diu and Goa, he journeyed to Sri Lanka. It was while sailing from that island to Mylapore that he passed by Mamallapuram. The original Italian expression in Balbi's text is *Sette Pagodi di Chini*. There was then a notion among foreign visitors, but not among the Indians, that the Chinese had traded with the Coromandal coast and even settled down there in the past. Now in the *Catalan map* of 1375 there appears in the place occupied exactly by Mamallapuram in relation to Mylapore, there called *Mirapore*, the expression, *Setemelti*. Colonel Henry Yule, the author of *Cathay and the Way Thihter*, suggests that *Setemelti* is an error for *Sette Temple* or *Seven Pagodas*. There can be little doubt that he is right. The location of the site both in itself and in relation to Mylapore proves this. The *Catalan map* recognises 'the peninsular form of India for the first time, and Marco Polo's results are shown to be thoroughly appreciated. Polo did not visit Mamallapuram, but he did come to Mylapore. There he must have heared of Mamallapuram. Only foreigners talked of the *Seven Pagodas*. Not one Indian author or inscription did. This was for an obvious reason. Nobody who has personally visited the site could ever think that there are seven pagodas there, whether by *pagodas* are meant temples or temple towers. But to the foreign sailors in the ships passing by (Mamallapuram had ceased to be a port by now) the name would have appeared interesting. If this surmise is accepted, it takes the beginning of Mamallapuram's modern history back from the sixteenth to the fourteenth century.

கோச்செங்கணனைப் பற்றிய புதிய செய்தி

க. குழந்தைவேலன் M. A., Dip. Epgy. & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

சங்க காலத்தில் சிறப்புப் பெற்றவனும், சிலந்தியாய்த் திகழ்ந்து சோழர் குலத்து உதித்துக் களவழிப்பாக் கொண்டவனுமான கோச்செங்கணன் தமிழர் இதயத்தில் இடம் பெற்றவன். சிவனை என்றும் மறவாத சிந்தையனை இவன் தன்னுடெங்கும் பெருக்காறு சடைக்கணிந்த பெருமானர்க்கு எழுபதினெட்டும் மற்றும் பல கோயில்களை எடுப்பித்தான். கி. பி. 8-ஆம் நூற்றுண்டினரான திருமங்கை மன்னர் 'என்தோள் ஈசர்க்கு எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட செங்கணன்' எனப் புகழ்வார்.

இவன் சோழ நாட்டில் சிவபிரானுக்கு எடுத்த கோயில்களைச் சேக்கிழார் பின் வருமாறு குறிப்பிடுவார்.

> மந்திரிகள் தமை ஏவி வள்ளல் கொடை அபயன்
> முந்தைவரும் குல முதலோர் ஆயமுதற் செங்கணர்
> அந்தமில் சீர்ச் சோணாட்டில் அகனாடு தொறுமணியார்
> சந்திரசேகரன் அமரும் தானங்கள் பல சமைத்தார்.

இவன் எடுப்பித்த கோயில்கள் சோழநாட்டில் இருந்தன. இப்பொழுது சோழநாட்டுக்குப் புறம்பே, தகடூரில் கோச்செங்கணீச்சுவரம் என்று செங்கணன் பெயரால் ஒரு கோயில் இருந்தது என்பது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முதல் இராஜாதிராஜன் கல்வெட்டில் இது குறிக்கப்பட்டுள்ளது. ஆனல் இக்கல்வெட்டு வேறொரு ஆலயத்தில் (அரியரநாத சுவாமி கோயில்) படிக் கல்லாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

முற்காலத்தில் அரசன் தான் எடுப்பித்த கோயிலுக்குத் தன் பெயரைவைக்கும் மரபு உண்டு. ஆதலின் 'கோச்செங்கண்ணீச்சரம்' என்பது கோச்செங்கட் சோழனல் கட்டப்பட்டது என்பது தெளிவு. இதுகாறும் கோச்செங்கணனைப்பற்றி அறிந்திராத செய்திகளை இக்கல்வெட்டு நமக்குக் கூறுகிறது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ ராஜஜெவற்கு யாண்டு ௩௰௨ ஆவது ஜயங் கொ . . .
2 தகடூர் கோச்செங்(க)ணீஸ்வரமுடைய மஹாஜெவற்கு வைத்த திரு நொ . . . .

கோச்செங்கணீஸ்வரத்தைக் குறிக்கும் முழுக் கல்வெட்டொன்றும் தகடூர் அருகிலுள்ள சிவாடி என்ற ஊரில் கிடைத்துள்ளது.

செங்கணன் சேரமான் கணைக்கால் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் போர்ப்புறத்து சிறைப்பிடித்தவன். இவன் கருவூர் உள்ளடக்கிய சேரனாட்டை வெற்றி கொண்டதோடு, தகடூர் வரை தனது ஆட்சியைப் பரப்பினன் என்பதையும் இக்கல்வெட்டு காட்டுகிறது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின காலாண்டு இதழ்
இதழ் 4 ● ஆனந்த ஆண்டு தைத் திங்கள் ● விலை. ரூ. 1-50.

அட்டைப் படம்

கி. பி. 850-ல் தஞ்சையைக் கைப்பற்றிச் சோழப் பேரரசைத் தோற்றுவித்தவன் விஜயாலயன். தஞ்சையைக் கைப்பற்றியதும் அங்கு நிசும்பசூதனியைப் பிரதிட்டை செய்து அத்தேவியின் அருளால் நாற்கடல் சூழ் நானிலத்தை ஆண்டான் என சோழர் செப்பேடுகள் கூறுகின்றன. எவ்வாறு சோழப் பேரரசு இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த உன்னத நிலையை வகிக்கிறதோ அதே போன்று இச்சிலையும் இந்தியக் கலைப்படைப்பில் ஒப்பரும் சிலையாகும். கலைவண்ணம் நிறைந்த இச்சிற்பம் சுமார் 6-அடி உயரம் உள்ளது. வடபத்ரகாளி என வணங்கப்படும் இச்சிலை இன்றும் தஞ்சையில் உள்ளது.

வெளிவந்துவிட்டது.

SEMINAR ON HERO-STONES Editor R. NAGASWAMY

தமிழகத்தின் வரலாற்றிற்கு இன்றியமையாதச் செய்திகளை அள்ளித்தரும் நடுகற்களைப்பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல். தமிழகத்தின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்கள் பலர் ஆராய்ந்து அளித்த அற்புத ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்டு தொகுக்கப்பட்ட அழகிய நூல்.—1972-ல் நடத்திய நடுகல் கருத்தரங்கில் பங்குபெற்ற கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

கிடைக்குமிடம்

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை
3/4 தெற்குக் கரைச் சாலை, சென்னை-28.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக டி துறையின் அச்சகத்தில், இத்துறையின் இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. ஆசிரியர்: இயக்குநர் இரா. நாகசாமி